Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 18 (22.01.2003) புதன்கிழமை இதழ் : 113



English Academy

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Email: thangan 672002 @ yahoo.com

T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, சித்தன்கேணி.



உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்

Better Place for your Children

(சி-474)


## தலைவர் சிந்தனையில் உதித்த மலரவன் நம்பிக்கை நிதியம்

### வசதிகுறைந்த பல்கலை மாணவருக்கு உதவிகள்



வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவருக்கான உதவி வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.பணிமனையில் யாழ். கிளைப் பொறுப்பாளர் விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ மாணவர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், கனேடிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கும் நிதி உதவி 'மலரவன் நம்பிக்கை நிதியத்தின்' ஊடாகத் தெரிவு (10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு இராணுவத்தின் ஆலோசனை வேண்டும்

### ரணிலுடனான திடீர் சந்திப்பில் சந்திரிகா வலியுறுத்து

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டுமானால் ராணுவத்தின் ஆலோசனை பெறப்படவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா, பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார். நேற்று இடம்பெற்ற திடீர் சந்திப்பில் ஜனாதிபதி இதனை வலியுறுத்தியுள்ளார். இரண்டு கட்டங்களாக நேற்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நேற்று நண்பகல் ஒரு சந்திப்பும், நேற்றிரவு இரண்டாவது சந்திப்பும் இடம்பெற்றிருக்கின்றது. நேற்றிரவு இடம்பெற்ற சந்திப்பில் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டிருக்கின்றது.

இதன்போது ஜனாதிபதி பல நிபந்தனைகளை விதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அமைச்சர் மிலிந்த மொறகொட தாய்லாந்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். துரித மீள் குடியமர்வுக்கு

# 21 பேர் குழு நேற்று நியமனம்!

## சிறான் பணிப்பாளர் செல்வின் தலைமையில் முக்கிய கலந்துரையாடல் ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களைத் துரிதமாக மீளக்குடியமர்த்துவதற்கான திட்டங்களை வகுப்பது, தேவைகளை இனங்காணுவது தொடர்பான பணிகளைச் செய்வதற்காக 21பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரச, புலிகள், யு.என்.எச்.சி.ஆர். ஆகிய மூன்று தரப்புகளில் இருந்தும் தலா ஏழுபேர் வீதம் இக்குழுவுக்கு தெரிவுசெய்யப்பட்டனர்.**

யாழ்.மாவட்டத்தில் துரித மீள் குடியேற்றத்தினை நடை முறைப்படுத்துவதற்கான விசேட செயற்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 11 மணிக்கு சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறானின் மேலதிக பணிப்பாளர்கள் டி.டி.அமரதுங்க, எஸ்.எல்.எம்.பளீல் மற்றும் யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, குருநகர் பங்குத்தந்தை அருட்திரு. ஜெயசேகரம், திட்டமிடல் (10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி, சிறான் பணிப்பாளர், யாழ்.அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆகியோரை படத்தில் காணலாம்.

## சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் மீள்குடியமர்வை அவதானிக்க ஏற்பாடு

### இரண்டு பிரிவுகளுக்கு ஒருவரென புலிகள் பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்காக யாழ்.மாவட்டதிற்கென அமைக்கப்பட்ட குழுவில், தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் அங்கம் வகிக்கும் ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒவ்வொருவரும் தலா இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீள்குடியமர்வு சம்பந்தமான விடயங்களைக் கவனிக்கும் வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி - யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களுக்கு குருநகர் பங்குத்தந்தை ஜெயசேகரம் அடிகளாரும்,

தென்மராட்சிக்கு அருந்தவபாலனும்,

நெடுந்தீவு,வேலணை, ஊர்காவற்துறை ஆகிய பிரதேசங்களுக்கு ப.கனகலிங்கமும்,

பருத்தித்துறை மருதங்கேணி ஆகிய பிரதேசங்களுக்கு சி.பொன்னம்பலமும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## டெனிஸ் பேரவைப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

### மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுவது குறித்தும் ஆராய்வு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை டெனிஸ் அகதிகள் பேரவையைச் சேர்ந்த பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் இந்தச்சந்திப்பு இடம்பெற்றது. கிளிநொச்சியில் உள்ள தமிழீழ அரசியற்துறை நடுவப்பணியத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, டெனிஸ் அகதிகள் பேரவையின் ஆசிய, ஆபிரிக்க தலைவர் செயலகப் பிரதிநிதி நென்ஸ் பென்டர்ஸன் மற்றும் பேரவையின் இலங்கைக்கான பிரதிநிதி விகோரி எவசன் ஆகியோர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள மனிதாபிமான பணிகளில் தமது பேரவையும் கலந்துகொள்வது பற்றி டெனிஸ் அகதிகள் பேரவையின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தில் சிறானுக்கு அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் (சிறான்) இணைப்பு அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் வடக்கு, கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு (சிறான்) யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளும் செயற்றிட்டங்களுக்கும் மற்றும் நடவடிக்கைகளுக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கெங்கு முதற்கட்ட மீள்குடியமர்வு இன்று செயலகத்தில் முக்கிய ஆய்வு

### சிறான் அதிகாரிகள், மீள்குடியமர்வுக்குழுவினர் பங்குபற்றுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் துரிதமாக மீள்குடியேற்றத்தினை மேற்கொள்வது தொடர்பான உதவி அரசாங்க அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். அரச அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சிறான் அதிகாரிகளும் யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்வை முன்னெடுப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குழுவின் இருபத்தொரு அங்கத்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் குடாநாட்டில் எந்தெந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றத்தினை உடனடியாக மேற்கொள்வதென இனங்காணப்பட்டு ஆராயப்படவுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



மகிந்த வந்து மகேஸ்வரனை மயக்கிட்டாரோ...?

# பொ.ஐ.முன்னணியுடனான உடன்பாடு புலிகளுடனான பேச்சினைப் பாதிக்காது

## ஜே.வி.பி. எம்.பி. அனுர குமார கூறுகின்றார்

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டாலும், அந்த இணக்கப்பாடு, பொதுஜன ஐக்கிய முன்னணி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தடையாக இருக்காது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டுமானால், சில விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். சகல இன மக்களும் நாட்டின் சகல இடங்களிலும் வாழ உரித்துடையவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்மக்களுக்கு விரோதமாக செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

1977-1989 ஆம் ஆண்டுகளில் நாம் மேற்கொண்ட கிளர்ச்சிகளின் போது தமிழ், முஸ்லிம் மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் அனுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

# 11 மாவட்டங்களின் கல்வி அபிவிருத்தி 22 கோடி ரூபாவை யுனிசெப் வழங்கும்

வடக்கு - கிழக்கு உட்பட 11 மாவட்டங்களில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக அடுத்த வருடம் 21 கோடி 95 லட்சம் ரூபாவை யுனிசெப் ஒதுக்கியுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், பொலநறுவை, மொனராகலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

முக்கியமாக, விளையாட்டுத்துறைக்கு இந்நிதி கூடுதலாகப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதானத்தின் பெயரால் மக்கள் ஏமாற்றப்படுவதை அனுமதிக்கமுடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

சமாதானத்தின் பெயரால் அரசாங்கம் மக்களையும் நாட்டையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது. இதற்கு இடமளிக்கவோ, இதைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கவோ முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறையில் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் பேசிய போதே, மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் அவர் மேலும், தெரிவித்ததாவது,

பொதுமக்களின் நன்மைக்காக ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்த எப்போதும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். அவரது கரங்களை வலுப்படுத்த நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மத்திய கொழும்பு சுதந்திரக்கட்சி அமைப்பாளர் மேர்வின் சில்வா,

நாங்கள் ஜே.வி.பியினருடன் இணைந்து கொள்வோம். மார்ச் மாதத்தில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, விமல் வீரவன்சவுடன் நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்து வெற்றிப் பானங்களைப் பருகுவோம் என்று தெரிவித்தார்.

## மத்திய கல்லூரியில் நாட்டுக்கூத்து ஆய்வுரை

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்ற, கலாபூஷணம் பாஷையூர் தேவதாசனின்- "நாட்டுக்கூத்து பிரதியாக்கமும் மதிப்பீடும்" என்ற ஆய்வுரை இன்று யாழ். மத்திய கல்லூரியில் அதிபர் இராஜதுரையின் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## கோபி அனான் இலங்கை வருவாரா?

ஐ.நா.செயலாளர் கோபி அனான் இலங்கைக்குப் பயணமாவது தொடர்பாக, தாம் உறுதிப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக கோபி அனானின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கோபி அனான் இலங்கைக்கு வருவார் என இம்மாதம் 10 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இலக்கிய ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை 3.30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியக் கட்டடத்தில், செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலண்டனிலிருந்து வந்த எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு தனது எழுத்துலக வாழ்வின் அனுபவங்களை ஏனைய எழுத்தாளர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

(ரா)

# இன்றும் தொடர்ந்து நடைபெறும் அஞ்சல்சேவையாளர் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

தபால், தந்தி, தொலைத்தொடர்புச் சேவைச் சங்கத்தின் வடபிரதேச கிளையின் இரண்டு நாள் கருத்தரங்கு, நேற்றுக்காலை 9 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்விற்கு பிரதி அஞ்சல்மா அதிபர் கே.ஏ.எஸ்.சேனாதிர கலந்து கொண்டு, "நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக தபால் திணைக்களத்தின் வளர்ச்சி" என்ற தலைப்பில் கருத்துரை ஒன்றை வழங்கினார். தாய்ச் சங்கப் பொருளாளர் வ.விவேகானந்தலிங்கம், பிரதி அஞ்சல் மா அதிபர் (வடக்கு) என்.ஜெயரத்தினம், யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.பீ.இராசதுரை, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வுகள், இன்று காலையும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ரா,ச)

## இன்றைய நாள் இனிய நாள்

**22-01-2003 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | புத்திக்குறைவு, உறவினர் வருகை, அதிக செலவு, குடும்ப சுகம். |
| இடபம் | :- | தேக சுகக்குறைவு, அலைச்சல், பொருள் விருத்தி, குடும்ப சுகக்குறைவு. |
| மிதுனம் | :- | திரவிய லாபம், தொழில் சித்தி, லட்சுமிகரம், பெரியோர் மதிப்பு. |
| கர்க்கடகம் | :- | துயரம், ரோகபயம், பொருள் வரவு, அதிக பிரயாசை, சுகக்குறைவு. |
| சிங்கம் | :- | தன லாபம், வாகன யோகம், பூமியால் நன்மை, களஸ்திர சுகம். |
| கன்னி | :- | தேக ஆரோக்கியம், உறவினர் வருகை, பிரயாணத்தால் நன்மை. |
| துலாம் | :- | புத்தி குறைவு, நிலைப்பிரிவு, நல்வாழ்வு, பொருள் விருத்தி. |
| விருச்சிகம் | :- | அன்னியர் உதவி, தொழில் சிறப்பு, லட்சுமி கடாட்சம், குடும்பசுகம். |
| தனு | :- | பொருட்சேதம், அதிக கஷ்டம், புத்திரரால் நன்மை, தேகசுகம். |
| மகரம் | :- | களஸ்திர சுகம், இல்லச்சிறப்பு, நற்குணம், பொருள் விருத்தி. |
| கும்பம் | :- | மனச்சோர்வு, தனலாபம், குடும்ப சந்தோஷம், புத்திர சோகம். |
| மீனம் | :- | சிநேகித நன்மை, அதிக செலவு, குடும்ப சுகம், இன்பம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்


## வாசகர்களே! வாடிக்கையாளர்களே!!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

## நமது ஈழநாடு விளம்பர முகவர்

திருநெல்வேலியில்

ஆ.நடராசா
கஜன் கொமினிக்கேஷன்
பலாலி வீதி,
திருநெல்வேலி.



தொலைபேசி இல.
021-2222984,
021-2222983





## சிறு விளம்பரம்

### தேவை

தையற்கலையில் நல்ல அனுபவமுள்ள பெண்களும், துணி வெட்டும் அனுபவமுள்ள கட்டரும் உடனடியாகத் தேவை. தொடர்பு: 69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-516)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு


10.30, 2.30, 6.00, 9.30
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

திருச்சனல் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (டி.டே)
அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த
உல்லாசம்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER


# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 10 - 1941 | 26 - 10 - 2002 |

## அமரர் சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம்

எமது நிறுவனத்தின் தமிழ் விரிவுரையாளர் திரு.அ.பௌநந்தி அவர்களின் அன்புத் தந்தையாரின் பிரிவையொட்டித்துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, அன்னாருக்காக எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்,
கொலிஜ் ஒவ் கொமேர்ஸ்,
நெல்லியடி.

(211)

# யுத்த நிறுத்த விவகாரங்கள் குறித்து கருணா - ஒஸ்ரின் விரைவில் பேச்சு!

## கண்காணிப்புக் குழு நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் தொடர்பான விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவும் விரைவில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச்சந்திப்பில் இராணுவத் தரப்பில் அதிகாரிகளோ அல்லது புலிகளின் தரப்பில் வேறுதளபதிகளோ கலந்து கொள்வது குறித்து இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை எனத்தெரிய வருகின்றது.

இந்தச்சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ நான்கு விடயங்கள் குறித்து கேணல் கருணாவுடன் பேசுவார் எனத் தெரியவருகிறது.

கிழக்கில் புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள், மட்டக்களப்பில் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் காணாமற்போன விவகாரம், மணலாறில் இராணுவச் சிப்பாய் புலிகளால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள விவகாரம், மாங்குளத்தில் சிறைக்கைதி ஒருவர் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் ஆகிய விவகாரங்கள் குறித்தே கருணாவுடன் ஒஸ்ரின் பெர்ணான்டோ பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்து தகவல் வெளியிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி ரெய்ரூர் ரொக்கில்சன் இச்சந்திப்புக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத்தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இம்மாத இறுதிக்குள் பேச்சுக்கள் நடத்தப்படும். இதன் அடிப்படையில ஒஸ்ரின் பெர்ணான்டோ, கேணல் கருணா ஆகியோர் தயாரிக்கும் கூட்டறிக்கை எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் சமர்ப்பிக்கப்படும் எனவும் 'அவர் மேலும் தெரிவித்தார்.

### ஒட்டுமடம் புனித செபஸ்தியார் திருவிழா

ஒட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா நாளைமறுதினம் 24 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனை நடைபெற்று, 26 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், அதனையடுத்து புனிதரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

### காய்ச்சலால் இன்னொருவர் மரணம்

காய்ச்சல் காரணமாக கடந்த 15 ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆனைக்கோட்டைவாசி நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

ஆனைக்கோட்டை, சாவற்காட்டைச் சேர்ந்த துரையப்பா குணராஜா (வயது 60) என்பவரே காய்ச்சலால் உயிரிழந்தவராவார். (60)

# ஹெலி வீட்டில் கைப்பற்றிய ஒளிநாடா பொலிஸாரின் தீவிர சோதனையில்!

## சிறுவர் துஷ்பிரயோகக் காட்சிகள் உள்ளதாகச் சந்தேகம்

சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான மத்யூ ஹெலியின் இலங்கை வீட்டிலிருந்து பொலிஸார் கைப்பற்றிய ஒளிநாடாக்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளதா எனப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

மத்யூ ஹெலி, இலங்கையில் ஓர் உல்லாச வீட்டை ஏழுவருடங்களுக்கு முன்னர் வாங்கியிருந்தார். இங்கு அடிக்கடி வந்து தங்கிச் செல்வது வழக்கம்.

தற்போது ஹெலியைப் பிரித்தானியப் பொலிசார் விசாரணைகளுக்கு உட்படுத்தியதை அடுத்து இவரது இலங்கை வீட்டில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றதா எனப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.


ஹெலியின் இலங்கை வீடு.


ஹெலியுடன் கருண ரொட்ரிகோ

வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து கணினி மற்றும் ஒரு தொகுதி ஒளிநாடாக்களையும், சிறுவர் ஒளிநாடாக்களையும் கைப்பற்றினர்.

இவரது வீட்டைச் சோதனையிடப் பொலிஸார் முற்பட்டபோது, அங்கு காவலுக்கிருந்த கருண ரொட்ரிகோ அதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டார். பின்னர் பொலிஸார் தேடுதல் ஆணையைச் சமர்ப்பித்தே வீட்டைச் சோதனையிட்டனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட ஒளிநாடாக்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான காட்சிகள் உள்ளனவா என ஆராயப்பட்டு வருகிறது. அத்துடன், ஹெலியின் வீட்டுக்கு வருவோர் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினரா என்பது குறித்த விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றது.

ஹெலியின் வீடு அமைந்துள்ள பகுதி வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மீனவர்கள் வசிக்கும் பகுதியாகும். இப்பகுதியில் பணத்துக்காகச் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


ஹெலியின்வீட்டில் இருந்த கணினி பரிசோதிக்கப்படுகின்றது.

# எந்த நேரத்திலும் அரசாங்கம் தேர்தலுக்குத் தயாராகவுள்ளது

## ஐ.தே.க. செயலாளர் கூறுகிறார்

அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஒன்றுக்குத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய அரசியல்நிலை தொடர்பாக மக்களை அறிவூட்டி, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்டப் பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கடலில் தத்தளித்த இந்தியக் கப்பல்கள் திருமலைக்கு இழுத்துவரப்பட்டன!

திருகோணமலையில் இருந்து 50 கடல் மைலுக்கப்பால் பலத்த காற்றினால் தத்தளித்துக் கொண்டிருந்த இரு இந்தியக் கப்பல்களை ஏனைய கப்பல்கள் காப்பாற்றி, திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கொண்டு வந்துள்ளன.

பாதும்ப, சாகர என்ற இந்தக் கப்பல்கள் 11ஆம் திகதி கொச்சித் துறைமுகத்தில் இருந்து சென்னைக்குப் பயணத்தை ஆரம்பித்தன.

அந்தவேளையில் கடலில் ஏற்பட்ட பலத்த காற்றினால் இரு கப்பல்கள் தத்தளித்துக்கொண்டிருந்தபோதே காப்பாற்றப்பட்டன.

# மட்டக்களப்பில் புலிகளிடம் சரணடைந்த சிப்பாய்!

மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் கடந்த வியாழனன்று புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான இலுப்பையடிச்சேனைக்கு வந்தே இவர் புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

ஏற்கனவே, இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இவரைக் கைதுசெய்து மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொண்டும்கூட இராணுவத்தில் இருப்பதை விரும்பாததாலேயே புலிகளிடம் சரணடைந்ததாக இவர் தெரிவித்தார். இந்தச்சிப்பாயை விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவின் ஊடாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# புலிகள் - அரசு சமாதானப் பேச்சில் ஜனாதிபதியின் பிரதிநிதியும் வேண்டும்

## பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

விடுலைப் புலிகளிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஜனாதிபதியின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்க வேண்டும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் அமுனுகம, நிமால் சிறிபால டீ சில்வா, ஜோன் செனவிரத்ன ஆகியோர் பெல்ஜியம் நாட்டில் வைத்துக் கூட்டாக இக்கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

நான்கு நாடுகளின் சமஷ்டி மாதிரிகளைக் கற்பதற்கான சுற்றுப்பயணத்தினை மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெலஜியம் நாட்டினது சமஷ்டி முறைமை பற்றி ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுதுள்ள அரசியற் சூழ்நிலையில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் சுமுகமான உறவு நிலையைப்பேணுவதற்காக எதிர்க்கட்சியின் இக்கோரிக்கை அரசாங்கத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகின்றது.(01)

# இலங்கையர்களுக்கு நோர்வேயில் வேலைவாய்ப்பு

நோர்வே அரசாங்கம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே, நோர்வே அரசு இதுபற்றி ஆராயவுள்ளது.

இலங்கையர்களுக்குத் தொழில் நுட்பத்துறையில் இரண்டு வருட பயிற்சிக்குப் பின்னர் தொழில் ஒன்று பெற்றுக்கொடுக்கும் வகையில் திட்டம் வகுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே நாட்டில் தற்பொழுது பல இலங்கையர்கள் ஊடகத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயிற்சிகள்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




யாழ்.வந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் ஏனைய எம்.பிச்களும் நயினாதீவு நாகவிகாரையில் வழிபடும் காட்சிகள். படங்கள் - லிவிங்ஸ்டன்.

# வட -கிழக்கு மீள் குடியேற்றத்திற்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

## யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி மொர்கன் மொறிஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் மக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் மற்றும் அபிவிருத்தி, புனர்நிர்மாண வேலைகளுக்காகவும் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் (யு.என்.எச்.சி.ஆர்) பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அண்மையில் யு.என்.எச்.சி.ஆர் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற வருடாந்த ஒன்றுகூடலில் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி மொர்கன் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட மேற்படி ஒன்றுகூடலில் மொர்கன் மொறிஸ் மேலும் தெரிவித்ததாவது,

ஒதுக்கப்பட்ட நிதியைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இதற்காகத் திட்டவரைபினை விரைவில் செய்து தருமபடியும் அவர் - உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தார்.

ஒன்றுகூடலில் கலந்துகொண்ட யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், கடந்த 2002 ஆம் ஆண்டின் இறுதிவரை யு.என்.எச்.சி.ஆரின் பங்களிப்புக் குறித்தும், அதனால் மக்கள் அடைந்த பலனும் திருப்திகரமாக இருப்பதாகப் பாராட்டுத் தெரிவித்தார். (55)

# பல்கலைக்கழக சாரதி நியமனம் ஆட்சேர்ப்பு விதிகளுக்கு முரணானது

## ஊழியர் சங்கம் துணைவேந்தருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் சாரதி ஒருவருக்கு நியமனம் வழங்கத் தீர்மானித்திருப்பது ஆட்சேர்ப்பு விதிகளுக்கு முரணானது. உள்ளக ஊழியர்களின் பதவி உயர்வு வாய்ப்புக்களை இது பாதிக்கக் கூடியது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் துணைவேந்தருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஒருவரினால் பல்கலைக்கழகத்துக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்ட வாகனத்துக்கு, அமைச்சர் குறிப்பிட்ட சாரதியையே ஒப்பந்தகாரராக நியமிப்பதென யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்ததை அடுத்தே, பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கண்டவாறு கடிதத்தைத் துணைவேந்தருக்கு எழுதியுள்ளதாக அறிவித்துள்ளது.

# உவர் நிலத்தில் பயிர்ச்செய்கை வல்லையில் செழித்துள்ள வெங்காயம்

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வல்லைவெளியில் உவர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த வெங்காயச் செய்கை வெற்றியளித்ததைத் தொடர்ந்து கடந்த 8 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இம்முறை வெங்காயம் செய்கைபண்ணப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் நன்கு செழித்து வளர்ந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிகளவான செலவுகளைக் குறைப்பதற்கும் வல்லையில் உவர் நிலங்களில் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கும் இந்த வெங்காயப் பயிர்ச்செய்கை முன்னுதாரணமாக அமைந்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (13)

# நேர்முகப்பரீட்சை நடத்த சுருக்கெழுத்துக்கழகம் கடிதம்

(நவிண்டில்)

மத்திய அரசின் கீழுள்ள திணைக்களங்களின் தமிழ் தட்டெழுத்தாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2000 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இரண்டு வருடங்களாகியும் இதுவரை நேர்முகப்பரீட்சை நடாத்தப்படவில்லை.

இப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு நேர்முகப்பரீட்சையை நடாத்தி நியமனம் வழங்குமாறு கோரி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், இணைந்த சேவைகள் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. (116)

## மைலோ உதைபந்தாட்டப் போட்டியில் இரு யாழ். அணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட மைலோ உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற 16 வயதிற்குட்பட்ட யாழ். மத்திய கல்லூரி அணியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் நாளைமறுதினம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் தேசிய ரீதியிலான போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன. யாழ். மாவட்ட மைலோ உதைபந்தாட்ட இணைப்பாளர் வ.செ.மகேந்திரம், பயிற்சியாளர் எஸ்.எச்.கே.மொகைன் ஆகியோர் போட்டியாளர்களைக் கொழும்புக்கு அழைத்துச் செல்லவுள்ளனர்.

யாழ்மாவட்டத்தில் இம்முறையே இப்போட்டி நடத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## காலாவதியான உணவுப் பொருட்கள் அழிப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப்பொருட்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் அழிக்கப்பட்டன.

கடந்தவாரம் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரப் பரிசோதகர்கள் இத்திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது காலாவதியான விலையுயர்ந்த பெருமளவு பிஸ்கட் மற்றும் உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன. (ச.கி)

## சாயி நிலையத்தில் வீடியோ படக்காட்சி

உணவுக்காக மிருகங்கள் கொல்லப்படுதல் மற்றும் புட்டபர்த்தியில் இடம்பெற்ற மகளிர் தினம் ஆகியன தொடர்பான வீடியோப்படக்காட்சிகள், இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீசத்தியசாயி நிலையத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.15 மணியளவில் காண்பிக்கப்படும்.

# பல்கலைக்கழகத்தில் கண்காட்சி நாளைவரை நடைபெறும்

## மாணவருக்கான வினா-விடைப்போட்டி 26இல்

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் 2ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழீழ மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து நடாத்தும் தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. நாளை 23 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரை இக்கண்காட்சி நடைபெறும் என மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக்கண்காட்சியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்படவுள்ளது தரம் 9 தொடக்கம் 13 வரையுள்ள மாணவர்களுக்கான வினா-விடை எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இவற்றில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கான பரிசில்களும், கூடுதல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் தமிழீழ மாணவர் அமைப்பினால் வழங்கப்படும்.

# திருட முயன்ற நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

## நையப்புடைக்கப்பட்டு விடுவிப்பு

யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் வீடொன்றில் திருட முயன்ற ஒருவரைப் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர்.

கடந்த 19ஆம் திகதி இரவு 11 மணியளவில் இப்பகுதி வீடொன்றில் திருட முயன்ற இருவரை பொதுமக்கள் துரத்தினர். ஒருவர் பொதுமக்களிடம் சிக்கினார். மற்றவர் ஓடித்தப்பிவிட்டார்.

பிடிக்கப்பட்டவரை பொதுமக்கள் நையப்புடைத்த பின்னர், எச்சரிக்கை செய்து விடுவித்தனர். கடந்த பல நாட்களாக இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாய அமைப்புக்கள் கைதடியில் வயல் விழா

(கைதடி)

பட்டினிக்கு எதிரான நிறுவனம் வழங்கிய விவசாய உள்ளீடுகளுக்கு நன்றி தெரிவித்தும், கைதடி விவசாயிகளின் வளர்ச்சி பற்றி அறியவும் கைதடி விவசாய அமைப்புக்கள் இணைந்து- விவசாய சம்மேளன தலைவர் செந்தில்நாதன் தலைமையில் வயல்விழா நடத்தப்பட்டது.

இதில் பிரதம விருந்தினர்களாக பட்டினிக்கு எதிரான நிறுவன திட்டமிடல் முகாமையாளர், உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை, கமநல நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.தவராசா, விவசாய போதனாசிரியர் ஆ.தவபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவின்போது, விவசாயிகளின் பயிர்கள் பார்வையிடப்பட்டன. மேலும், பட்டினிக்கு எதிரான நிறுவனத் திட்டமிடல் முகாமையாளர்- சுகாதாரம், விவசாயம் போன்ற தேவைகளுக்குத் தாம் தொடர்ந்து உதவுவதாகவும் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் உறுதியளித்தார். (31)

## ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தீவக வலயக்கல்வித் திணைக்களத்தின்கீழ் வேலணையில் இயங்கவிருக்கும் புதிய ஆசிரியர் மத்திய நிலையத்திற்கு முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

இந்த மத்திய நிலையத்தில் முகாமையாளராக ஒருவர் காப்புக் கடமை அடிப்படையில் சேவை செய்வதற்கு நியமிக்கப்படவுள்ளார். இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி, எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் நான்காவது அகவையில்...



HAPPY BIRTHDAY

பெயர் : அ.திலக்ஷன்

முகவரி: பொன்னாலை, சுழிபுரம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# தமிழில் மாணவர் தேர்ச்சியின்மை; ஆசிரியர்களும் முக்கிய காரணம்!

## இலக்கணப் பூங்கா வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ்



ச.வே.பஞ்சாட்சரம்

"மாணவன் தன் விடையில் விடும் எழுத்துப் பிழைகளைத் தமிழ்ப்பாட ஆசிரியர்கள் மட்டும்தான் திருத்தக் கடமைப்பட்டவர்கள். நாங்கள் திருத்தத்தேவை இல்லை என்று ஏனைய விஞ்ஞானம், கணிதம், சமயம் போன்ற பாட ஆசிரியர்கள் அலட்சிய மனப்பாங்கோடு நடந்து கொள்வதும், இன்று தமிழ் மாணவர்கள் தமது வசனங்களில் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகளோடு தமிழை எழுதுவதற்கு ஒரு காரணம். இதனால், தமிழ்மொழி மூலமே சகல பாடங்களையும் கற்பிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தும், தமிழறிவு இன்று வளர்வதற்குப் பதில் தேய்வடைந்து வருகிறது"

மேற்கண்டவாறு அண்மையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய "தமிழிலக்கணப் பூங்கா" நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தமது உரையில் குறிப்பிட்டார்.




நா.குழந்தைவேல்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் நூலை வெளியிட்டு வைத்தார்.



கலாநிதி சபா.ஜெயராசா

நூல் ஆய்வுரையை தமிழ்ப் பேராசான் நா.குழந்தைவேலும், ஆசியுரையைக் கலாநிதி சொக்கனும், வாழ்த்துரையை முன்னாள் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் அ.பஞ்சலிங்கமும், பதிலுரை, நன்றியுரையை நூலாசிரியரும், வரவேற்புரையை ஆசிரியர் பா.மகாலிங்கசிவமும் நிகழ்த்தினர்.



# மாணவர் மலர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை


## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்



### வினாப்பத்திரம் I

✷ அவதானிப்பு - (OBSERVATION)

✦ கீழே தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து அதில் நீர் காண்பவை பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுக.
ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களேனும் கொண்டிருத்தல் வேண்டும்.



1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................
4. ..........................................................................

✷ பிரசினங்களைத் தீர்த்தல் (PROBLEM SOLVING)

✦ கீழ்வரும் வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. (அ) இராணி, சுதன், கீதா, இராமன் ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். இராமனைவிட 5 புள்ளிகள் கூடுதலாக இராணி பெற்றதுடன், கீதா சுதனைவிடப் 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தாள். இராணியும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?
(1) கீதா (2) இராமன் (3) சுதன்

(ஆ) கீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனில், இராமன் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?
(1) 43 (2) 53 (3) 56

✷ எதிர்வுகூறல் (PREDICTION)

✦ கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. கணித பாடத்திலான 6 மாதாந்தச் சோதனைகளில் தரம் 5 மாணவனொருவன் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வருமாறு:-
36, 44, 40, 48, 44, 52
அடுத்த மாதாந்தச் சோதனையில் அவன் பெறக்கூடிய புள்ளி யாது? (.........)

2. தரம் 5 மாணவனொருவன் மாதந்தோறும் தனது சேமிப்புக் கணக்கில் குறித்த தொகையான ரூபாய்களை வைப்புச் செய்கிறான். சில மாதங்களாக அவன் வைப்புச் செய்த ரூபாய்கள் பின்வருமாறு:-

| ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | மே | ஜூன் | ஜூலை |
|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 10 | ..... | 19 | 25 | 32 |


ஏப்பிரல் மாதத்தில் அவன் வைப்புச் செய்திருக்கக்கூடிய தொகை யாது? (.........)

3. ஒலிம்பிக் விளையாட்டு விழா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும். 26 ஆவது ஒலிம்பிக் வியைாட்டு விழா இவ்வருடம் நடைபெறுகின்றது. 15 ஆவது ஒலிம்பிக் விழா எவ்வாண்டில் நடைபெற்றது. (.........)


4. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பாடசாலையின் காலைக் கூட்டத்தில் மாணவர் தலைவன் ஒருவன் உரை நிகழ்த்துவது வழக்கம். கடைசித் திங்களன்று காலைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியவன் அஜித் ஆவான். அஜித் இன்னும் ஐந்து வாரங்களில் கூட்டத்தில் மீண்டும் உரை நிகழ்த்த வேண்டும். கடைசித் திங்கட்கிழமை ஜூன் 17 ஆந் திகதியாக இருந்தால், அடுத்து அவன் காலைக் கூட்டத்தில் உரையாற்ற வேண்டிய திகதி யாதாக இருக்கும்? (.........)

✷ கோலங்களின் புலக்காட்சி (PERCEPTION)

✦ கீழே உள்ள கூட்டினுள் காணப்படுவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற மாணவனுக்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அன்பளிப்புப் பொதி வைக்கப்பட்டிருந்த முறையாகும். இப்பொதியை வைக்கக்கூடிய வேறு இரு முறைகள் அ, ஆ வினாக்களில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்துச் சரியான விடைக்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.




அ)



1. 2. 3. (.........)


ஆ.




1. 2. 3. (.........)

✷ தொடர்புகளைக் காணல் (SEEING RELATIONSHIPS)


✦ கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் முதல் இரண்டு படங்களிலும் உள்ள இலக்கங்களுக்கிடையிலான தொடர்பினை அவதானித்து அறிந்து மூன்றாவது உருவப் படத்தில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான இலக்கத்தினைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.




1. 28
2. 30
3. 32




1. 14
2. 12
3. 10




1. 64
2. 68
3. 72

✷ வெளித் தொடர்புகளை இனங்காணல் (SEEING SPATIAL RELATIONSHIPS)

✦ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.

> எனது வகுப்பு நண்பன் ஒருவன் வாகன விபத்தில் சிக்கி [ 1 ] அனுமதிக்கப்பட்டுள்ளான். நான் அம்மாவுடன் ஞாயிற்றுக்கிழமை அவனைப் பார்க்கச் சென்றேன். நாங்கள் அவனுக்கு [ 2 ] சுவையான பலகாரங்களும் கொண்டு சென்றோம். அவனைக் கண்டதும் எனக்குக் கண்ணீர் பெருகியது. அவனது கண்களிலும் கண்ணீர் வந்ததை நான் கண்டேன். அவனது கைகளிலும் தலையிலும் [ 3 ] கட்டப்பட்ருந்தன. அவன் அருகில் நீண்டநேரம் அமர்ந்திருந்து மிகுந்த துக்கத்துடன் திரும்பினோம்.

1. முதலாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.
(1) விடுதியில் (2) வைத்தியசாலையில் (3) மருந்தகத்தில்
2. இரண்டாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.
(1) பந்துடன் (2) கிறிக்கெட் மட்டையுடன் (3) பழங்களுடன்
3. மூன்றாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.
(1) கட்டுக்கள் (2) மருந்து (3) நூல்

**வி.என்.எஸ்.உதயச்சந்திரன்**
**B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.**

(தொடரும்)

## க.பொ.த.உயர்தர பொதுச்சாதாரணப் பரீட்சையை (C.G.T)

# இலகுவாக எதிர் கொள்வது எவ்வாறு?

### சுற்றாடல் (தேசிய அளவில்)

✷ 2001, 2002 ஆம் ஆண்டுகளில் சுற்றாடலியலாளர்கள் எவ்விடயம் பற்றி அதிகளவில் கலந்துரையாடினர்.
1. ஓசோன் படல துவாரம் 2. கோளவெப்பம் அதிகரித்தல்
3. பொலித்தீன் பாவனை அதிகரிப்பு 4. பச்சையில்ல விளைவு
5. சுற்றாடல் மாசுபடல்.

### தொழில்நுட்பம் (சர்வதேச அளவில்)



✷ கணினி உற்பத்தி மற்றும் மென்பொருள் உற்பத்தியில் அதிமுன்னனி நிறுவனமான 'மைக்ரோ சொவ்ற்' நிறுவனத் தலைவரான பில்கேட்ஸ் அண்மையில் 'கொம் டெக்ஸ் - 2002' எனும் கணினிக் கண்காட்சியை நடாத்தினார். இதில் பலரது கவனத்தையும் ஈர்ந்த விடயம்
1. கணினி நாட்காலி 2. கணினிக் கடிகாரம்
3. கணினி அலுமாரி 4. கணினித் திரை
5. மிகச்சிறிய கணினிகள்.

### சட்டம் (தேசிய அளவில்)

✷ அண்மையில் பாராளுமன்றத்திற்கு 19 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்படவிருந்து பின்னர் கைவிடப்பட்டது. இச்சட்டத்தின் நோக்கம்
1. எம்.பிக்கள் சுயவிருப்பத்தின் அடிப்படையில் கட்சித்தாவல்.
2. தேர்தல் நடாத்தப்பட்டு ஒரு வருடத்தின் பின் பாராளுமன்றைக் கலைத்தலை ரத்துச் செய்தல்.
3. ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பு.
4. இனப்பிரச்சினையைத் தீர்த்தல்.
5. அமைச்சர்களுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்குவதற்கு.

### நீதி (சர்வதேச அளவில்)

✷ 1998ஆம் ஆண்டில் பரவலாகப் பேசப்பட்ட லொக்கர் பீ குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகளான இருவர் ஆயுள் சிறைத்தண்டனை பெற்றனர் அவர்கள் வசிக்கும் நாடு
1. இஸ்ரேல் 2. ரஷ்யா 3. லிபியா 4. ஜப்பான் 5. துருக்கி

ஆக்கியோர்:- P.கமல்தாஸன் B.A, Spl.Trd com, Dip in Ngt (OUSL)
P.உமாசங்கர் B.Com, Spl.Trd com C.B.F (LON)

(தொடரும்)

# க.பொ.த. உயர்தரம்

# பல்தெரிவு வினாக்கள் ஊடாக

# பௌதிகம் கற்போம்



இன்றைய காலகட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பாடங்களில் மாணவர்கள் பெறும் ஒவ்வொரு புள்ளிகளும் அவர்களின் எதிர்கால வளமான வாழ்வை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. பௌதிகவியல் வினாத்தாளைப் பொறுத்தவரையில் பௌதிகவியல் I இல் 60 பல்தெரிவு வினாக்களும், பௌதிகவியல் II இல் பகுதி - A யில் 4 அமைப்புக் கட்டுரை வினாக்களும், பகுதி - B யில் 6 கட்டுரை வினாக்களில் 4 வினாக்களும் மாணவர்களால் விடையளிக்கப்பட வேண்டியனவாக அமைந்துள்ளன. பௌதிகவியல் I (50 புள்ளிகள்) இரண்டு மணிநேரத்தில் விடையளிக்கப்படல் வேண்டும். இது மாணவர்கள் அனைவரும் நன்கு அறிந்த விடயம். எனினும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில், பௌதிகவியல் வினாத்தாளில் பல்தெரிவு வினாக்கள் மாணவர்கள் பெறும் புள்ளிகளில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன என்பதுதான். ஆனால் இவ்வகையான வினாக்களுக்கு விடையளிப்பதில் பல மாணவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இக்கஷ்டங்களுக்கான முக்கிய காரணங்களாவன,

- ❖ தீர்வுக்கான பயன்படு உபாயத் திட்டங்களையும் முறைகளையும் மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கையாளாமை.
- ❖ சில அத்தியாவசிய அடிப்படை திறமை நுட்பங்களில் மாணவர்களுக்குப் பரீச்சயமில்லாமை.
- ❖ கற்கும்பொழுதே இலகுவில் ஞாபகப்படுத்தி உபயோகித்தலை எளிதாக்கும் வகையில் தேவையான அறிவைக் கற்று ஒழுங்குபடுத்தாமை.
- ❖ குறிப்பட்ட நேரத்திற்குள் குறிக்கப்பட்ட வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்கமுடியாமை.

அநேக மாணவர்கள் பல்தெரிவு வினாக்களுக்கு விடையளிப்பதற்குரிய உபாயங்களையும் வழிமுறைகளையும் சரியாகக் கற்றுக் கொள்வதில்லை. அவர்கள் பொதுவாகத் தர்க்கம், ஞாபகம், ஊகம் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். இதனைவிட கொடுக்கப்பட்ட விடைகளை ஒப்பிட்டுப் பார்த்தல், பிழையான விடைகளைப் படிப்படியாக விலக்குதல் ஆகிய உபாயங்களும் மாணவர்களினால் உபயோகிக்கப்படுகின்றன. இவை சில சந்தர்ப்பங்களில் பொருத்தமானவையாக இருப்பினும் அனைத்து சந்தர்பங்களிலும் சரியான விடைகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சிறந்தனவன்று. தரப்பட்டுள்ள தரவுகளிலிருந்து வினாவிற்கான சரியான விடையை விரைவில் உய்த்தறிந்து அதனை கொடுக்கப்பட்டுள்ள ஏனைய விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்தல் சிறந்த முறைகளில் ஒன்றாகும்.

பௌதிகவியல் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு சில அத்தியாவசிய அடிப்படைத்திறமை நுட்பங்களும், பௌதிக அறிவு சம்பந்தமான அடிப்படை விடயங்களில் போதிய அறிவும், அவற்றை இலகுவில் ஞாபகப்படுத்தி உபயோகிக்கும் ஆற்றலும் மிக மிக அவசியம். பௌதிகவியலில் சம்பந்தப்படும் தத்துவங்கள், விதிகள், சமன்பாடுகள், உண்மைகள் என்பவற்றை ஞாபகம் வைத்து தேவையான இடங்களில் அவற்றை நினைவிற்கொண்டு விவேகமாக விவாதித்தல், தீர்மானித்தல், பிரயோகித்தல் போன்றன மூலம் குறித்த நேரத்தில் ஒரு வினாவிற்கு விடையளிக்கும் ஆற்றலை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்குத் தேவை, கடுமையான பயிற்சி. இதன் மூலம் பரீட்சையில் தோன்றும் வினாக்களுக்கு விரைவாக மனதினால் விடையளிக்கக்கூடிய பக்குவம் மாணவர்களுக்கு ஏற்படும். இதனால் அவர்களுக்கு ஏற்படும் 'நேரம் போதாமை' என்னும் பிரச்சினையும் நிவர்த்தி செய்யப்படும்.

எனவே மாணவர்களே! நீங்கள் பரீட்சையை எதிர்கொள்ளும் முன் இயன்றளவு ஏராளமான பல்தெரிவு வினாக்களைச் செய்து பார்க்க வேண்டும். பௌதிக வினாத்தாளில் வரும் பல்தெரிவு வினாக்கள் நினைவு கூரல், எண்ணக்கருக்களை கிரகித்தலும் விளங்கிக் கொள்ளுதலும், பிரயோகம், பகுத்தலும் உயர்மட்டங்களும் போன்ற விடயங்களின் கீழ் அமையும்.


மாணவர்கள் கடந்தகால வினாத்தாள்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்வற்றிலுள்ள வினாக்களை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் இத்தகைய வழிமுறைகளைக் கையாளுகின்றனர். எனினும் அவர்களில் அநேகமானோர் கொண்டுள்ள தவறு என்னவெனில் குறித்த ஒரு வினாவை அவர்கள் தெரிவு செய்யும்போது அவ்வினாவிற்குரிய விடையைத் தெரிந்து கொள்வதுடன் மட்டும் நிறுத்திவிடுகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும். அவ்வினாவிற்கான அடிப்படைப் பௌதிகம் என்ன? கொடுக்கப்பட்டுள்ள ஏனைய விடைகள் ஏன் இவ் வினாவிற்குப் பொருந்தாது? அவ்விடைகள் ஒவ்வொன்றும் பொருந்தக் கூடியவாறு வினா எவ்வாறெல்லாம் மாற்றியமைக்கப்படாலம்? இவ்வினாவின் அடிப்படையை வைத்து வேறு எவ்வாறு வினா கேட்கப்படலாம்? போன்ற பல விடயங்களை மாணவர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்தகால உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை எடுத்து நோக்கினால் ஒரே அடிப்படை விடயத்தை மையமாகக் கொண்டு ஏராளமான வினாக்கள் சிறிய சிறிய மாற்றங்களுடன் காணப் படுவதை அவதானிக்கலாம். எனவே சிந்திக்கும் மாணவன் தான் எதிர்கொள்ளப்போகும் வினாவை முதலே அறியும் வாய்ப்புக்கூட ஏற்படலாம். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வினாவையும் பயிற்சி செய்யும்போது இவ்வாறெல்லாம் சிந்தித்து செயற்படுவானேயானால் 'வெற்றி நிச்சயம்'.

நாம் இங்கு உதாரணமாக சில வினாக்களை எடுத்து நோக்குவோம்.

**வினா 01.**
**1997 (57)**

பின்வரும் I எதிர் V வளையிகளில் எது இழை மின்குமிழ் ஒன்றுக்குரியதாகும்.



(1) (2) (3) (4) (5)

இவ்வினாவிற்கான விடையினைப் பின்வருமாறு சிந்திக்கலாம். தடை R இன் முனைக்குக் குறுக்கேயுள்ள அழுத்தவேறுபாடு V ஆகவும் அப்போது அதனூடான மின்னோட்டம் I ஆகவுமிருப்பின்,

$V = IR$ ஆகும்.


$$\left.\begin{array}{l} I = \left(\frac{1}{R}\right)V \\ \downarrow \quad \downarrow \quad \downarrow \\ Y = m \; x \end{array}\right\} a$$

இழைமின் விளக்கில் இழையின் முனைக்குக் குறுக்கேயான அழுத்தவேறுபாடு (V) கூட, அதனூடான மின்னோட்டம் (I) கூடும். இதன்போது அதன் தடை (R) கூடும். ஆகவே சமன்பாடு a க்குரிய வரைபின் படித்திறன் குறையும். ஆகவே, இவ்வினாவிற்கான சரியான விடையாக வரைபு (4) அமையும்.

ஏனைய வரைபுகளை உற்று நோக்கவோம்.

- ✱ ஓமின் விதிக்கு அமைந்த தடையைக் கருதின் அங்கு பௌதிக நிலமைகள் மாறாது எனக் கொள்ளப்படுவதால், அதன் முனைக்குக் குறுக்கேயான அழுத்த வேறுபாட்டை மாற்ற மின்னோட்டம் மாறும். தடை மாறாது. ஆகவே சமன்பாடு a க்குரிய வரைபின் படித்திறன் மாறாது. ஆகவே ஓமின் விதிக்கு அமைந்த இழைகளினது I எதிர் V வரைபாக வரைபு (1) ஆனது அமையும்.
- ✱ குறைகடத்தியினைப் பற்றிச் சிந்திப்போமாயின் மின்னோட்டம் கூட அதன் தடை குறையும். ஆகவே சமன்பாடு a க்குரிய வரைபின் படித்திறன் கூடும். ஆகவே குறைகடத்திகளுக்கான I எதிர் V வரைபாக வரைபு (5) ஆனது அமையும்.


**வினா 02**
**1996 (45)**





உருவில் காட்டப்பட்டுள்ளது போல கிடைத்திசையில் மாறாக்கதி V உடனசையும் நகர்த்திவார் ஒன்றின் மீது t= 0 எனும் நேரத்தில் m திணிவு உடைய பெட்டி ஒன்று நிலைக்குத்தாகப் போடப்படுகிறது. இப்பெட்டியானது வாரினது வேகத்தை t= t நேரத்தில் அடையுமாயின், இவ்வாரினால் பெட்டி மீது ஏற்படுத்தப்படும் உராய்வு விசையின் பருமன் (F) இனது நேரம் t உடனான மாறலை பின்வரும் வளையிகளில் எது திறம்பட வகை குறிக்கின்றது. (வாரிற்கும் பெட்டிக்குமான இயக்கவியல் உராய்வுக் குணகம் $\mu$ என்க)

1. 2.

3. 4.




5.





இவ்வினாவிற்கான விடையினைப் பற்றி நாம் பின்வருமாறு சிந்திக்கலாம்.


குற்றியானது வார்மீது வைக்கப்பட, வாரிற்கும் குற்றிக்குமிடையில் சார்பு இயக்கம் இருப்பதன் காரணமாக, வாரினால் குற்றிமீது ஓர் இயக்கவியல் உராய்வுவிசை வார் இயங்கும் திசையில் கொடுக்கப்படும். இவ்விசை காரணமாகக் குற்றி வாரின் இயக்கத்திசையில் ஓர் வேகத்தைப் பெறும். இதனால் வார்சார்பான குற்றியின் வேகம் மாறுபடும். ஆயினும், இயக்கவியல் உராய்வு விசை - சார்பு வேகத்தில் தங்காது என்பதால் அவ்விசை மாறாதிருக்கும். குற்றியின் வேகம் அதிகரித்து வாரின் வேகத்தை அடையும்போது, வார்சார்பாகக் குற்றி ஓய்வுக்கு வர வாரினால் குற்றிமீது கொடுக்கப்படும் உராய்வு விசை பூச்சியமாய் வரும். ஆகவே இவ்வினாவிற்கான விடையாக வரைபு (4) அமையும்.

இவ்வமைப்பு சம்பந்தமாக மேலும் சில விடயங்களை நோக்குவோம்.

- ✤ குற்றியில் தாக்கும் விசை ஆரம்பத்தில் மாறாதிருந்து பின் பூச்சியமாவதால் அதன் ஆர்முடுகல் மாறிலியாக இருந்து பின் பூச்சியமாகும். ஆகவே, குற்றியின் வேகம் நேரத்துடன் பின்வருமாறு மாறுபடும்.




- ✤ குற்றி வைக்கப்பட்டு அது வாரின் வேகத்தை அடைய எடுத்த நேரம் $t_o$ ஆயின்,
  நேரம் X அழுத்தியவிசை = பெற்ற உந்தம் என்பதற்கிணங்க
  $\mu mg \times t_o = mv$
  $t_o = \frac{v}{\mu g}$ என $t_o$ அறியப்படலாம்.
- ✤ குற்றியானது வைக்கப்பட்டு அது வாரின் வேகத்தை அடையும்வரை அது கிடையாக நகர்ந்த தூரமானது (1) இலுள்ள வேகநேர வரைபில் குற்றி V வேகத்தை அடையும்வரை அடைக்கும் பரப்பினால் தரப்படும்.
  ∴ குற்றி நகர்ந்த தூரம் = 1/2 x அடி x செங்குத்துயரம்
  $= 1/2 \times t_o \times V$
  $= \frac{Vt_o}{2}$
- ✤ வாரில் எண்ணெய்ப் படை ஒன்று பூசப்பட்டிருப்பின் குற்றி வைக்கப்பட, குற்றியில் சார்பு வேகம் காரணமாக ஓர் பாகுநிலை உராய்வுவிசை வாரின் இயக்கத்திசையில் தொழிற்படும். இதனால் குற்றி வலப்பக்கமாக வேகத்தைப் பெறச் சார்பு வேகம் குறைவடையும். பாகுநிலை உராய்வு விசை, சார்பு வேகத்திற்கு நேர்விகிதசமன் என்பதால் பாகுநிலை உராய்வு விசை குறைவடையும். ஆகவே குற்றியின் வேகம் நேரத்துடன் பின்வருமாறு மாறுபடும்.




ஆகவே, ஒவ்வொரு வினாவையும் பயிற்சிசெய்யும்போது இவ்வாறு பலவிதமாகச் சிந்தித்துச் செயலாற்றும் ஒரு மாணவன் உயர்தரப் பரீட்சையில் நிச்சயமாகச் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவான் என்பது உறுதி.

**R.குமரன் B.Sc**
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

rpe;jidf;F

*பயன்இல சொல் பாராட்டு வானை மகன்எனல்*
*மக்கட் பதடி எனல் .*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## விஜயங்களும், வேடங்களும்!

யாழ்ப்பாணம் வந்திருந்த எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் ஒரு நாள் 'அதிரடிப்பயணத்தை' முடித்துக்கொண்டு அன்றைய தினமே விமானமேறிவிட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த அல்லது வர வேண்டிய அரசியல் பின்புலம் என்னவாக இருப்பினும்- தமிழ்மக்களிடையே தென்னிலங்கை அரசியல்வாதிகளின் விஜயம் எந்தவொரு சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

யாழ்.வந்த மகிந்த குழுவினர் - நல்லை ஆதீனத்திலிருந்து, புதிதாகத் திறக்கப்படவிருந்த குருகுலம் வரை நடைபவனியாக வந்தபோது, வீதியில் சென்ற அல்லது அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் எவரும் - எதிர்க்கட்சித்தலைவர் குழுவினரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மக்களது இயக்கம் எந்த வகையிலும் இதனால் பாதிக்கப்படாதிருந்ததைக் காண வியப்பாகவும் அதே வேளை சிலிர்ப்பாகவும் இருந்ததாகக் குறிப்பிட்டார், குறிப்பிட்ட குழுவுடன் வந்திருந்த கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர்.

அந்தளவுக்கு - தென்னிலங்கை அரசியல்வாதிகளின் அரசியலும், விஜயங்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் - கவனத்திற்குரியவையாகும் தகுதியை இழந்து விட்டன என்ற நிலைப்பாட்டையே காணமுடிந்ததாக அந்த ஊடகவியலாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - இதே மகிந்த ராஜபக்ஷ குழுவினர் குருநகர் கரையோரப்பகுதிகளுக்குச் சென்றபோது - அங்குள்ள மக்களின் கடுமையான எதிர்ப்பையும் சந்திக்க நேர்ந்தது.

'எம்மை எமது வீடுகளுக்குச் செல்லவிடாமல் தடுத்து வைத்துக்கொண்டு பலமுறை எம்மை வந்து பார்வையிடுகிறீர்களே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கிறீர்கள் இல்லை என மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

யாழ்ப்பாண மக்களிடம் எழுந்த இத்தகைய உணர்வலைகளை மகிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் புரிந்து கொண்டார்களோ இல்லையோ - 'அரசியல்' நடாத்தி தமிழ்மக்களை எவரும் ஏமாற்றிவிட முடியாது என்பதையே நோக்க முடிந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 360 நாட்களைக் கடந்துவிட்ட போதும், தளர்வில்லாத நெருக்கடிகளுக்குள் வாழ்ந்துவரும் மக்களை - யுத்தத்தின் அவலங்களுக்குள்ளும், நீக்கப்படாத தளைகளுக்குள்ளும் சிக்குண்டிருக்கும் மக்களை பார்வையிட்டுச்செல்வதற்கு வரும் எத்தகைய அரசியல்வாதிகளுக்கும் - மக்களிடமிருந்து கிடைக்கும் 'வரவேற்பு' இதுதான் என்பதை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் தென்பகுதி அரசியல்வாதிகள் - இங்குள்ள நிலைகளைக் கண்டு 'கவலையடைவதும்' பின் பலாலி சென்று விமானமேறி இரத்மலானை சென்றதும் பாதை மாறுவதும் தமிழ்மக்களுக்கு ஒன்றும் புதிதல்லவே.

அரசாங்கத்தரப்போ, எதிர்த்தரப்போ இதிலிருந்து எவரும் விதிவிலக்காகி விடவில்லை.

யாழ்.மாவட்டம் போர் ஓய்ந்த கடந்த நாட்களில் கண்ட மாபெரும் இசைநிகழ்ச்சிகளும், களியாட்டங்களும், கண்காட்சிகளுமே - யாழ்ப்பாணத்தின் 'புனரமைப்பாகவும், புனர்வாழ்வாகவும்' பிரகடனப்படுத்தப்பட்டனவே ஒழிய -

உயர் பாதுகாப்பு வலயத்தினை ஓரடி நகர்த்திப் பின் தள்ளவும் எவராலும் முடிந்து விடவில்லை. மக்களின் வாழ்விலும் வசந்தம் வீசிவிடவில்லை.

ஒட்டுமொத்தத்தில் - யாழ். மண் அரசியல்வாதிகள் விஜயம் செய்யும் புண்ணிய தலமாகவும், காலத்துக்குக் காலம் எட்டிப் பார்த்துவிட்டுச் செல்லும் - மக்களைக் குஷிப்படுத்தக் கொண்டாட்டங்கள், திறப்பு விழாக்கள் நடாத்தும் வர்த்தக பூமியாகவும் மாறிவிட்டதைத் தவிர- எத்தகைய சீரான பயனும் விளைந்ததாகத் தெரியவில்லை.

யாழ். வந்தால் நல்லூரும், நயினாதீவும்தான் வருவோருக்கு கண்ணில் படுமென்றால்,

கொண்டாட்டமும், களியாட்டமும் காட்டியும், கண்காட்சிகளோடு கவரும் வர்த்தக சாலைகளுந்தான் திறப்போமென்றால்,

வெறுமனே போராட்டங்களில் தலைகாட்டிவிட்டு ஓய்ந்து விடும் நாடகமும், கொழும்பு வாழ் சீவியமும் தொடருமென்றால்,

எங்கள் கண்ணீரைத் துடைத்து கைகொடுக்காத எந்த வெள்ளை வேட்டிகளுக்கும் - குருநகர் மக்களைப் போல 'வரவேற்புத் தரவே' யாழ். மண் தயாராக வேண்டும்.

# ஜே.வி.பியின் கருத்துக்களுடன் உடன்படுவது மிகவும் கடினம்!

## ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி



விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் பயங்கரவாத நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கொழும்பில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் ஜே.வி.பி. பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வந்திருந்த யசுஷி அகாஷியுடன் ஜே.வி.பியினர் இரண்டு கட்டங்களாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். இதன்போதே அவர்கள் இக்கருத்தை வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை, ஜே.வி.பியினருடான இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட யசுஷி அகாஷி, இந்தச் சந்திப்பு புதிய அனுபவமாக இருந்தது. அவர்களின் கருத்துக்களுடன் உடன்படுவது மிகவும் கடினமானது எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - பிரெஞ்சு கடற்படைகள் கூட்டு ரோந்துக்கு சந்தகிரி அழைப்பு!

## கொழும்பு வந்த பிரெஞ்சுத் தளபதியிடம் விடுத்தார்

(கொழும்பு)

இந்தியக் கடற்பகுதியில்- இலங்கைக் கடற்படையுடன் பிரான்ஸ் கடற்படை இணைந்து செயற்பட வேண்டும் என்று, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி,



கொழும்பு வந்த பிரெஞ்சுக் கப்பல்

கொழும்பு வந்துள்ள பிரெஞ்சுக் கடற்படையின் இந்திய கடற் பகுதிக்கான தளபதி றியல் அட்மிரல் ரஸல் வில்மோரிடம் தெரிவித்துள்ளார்.

12 வருடங்களுக்குப் பின்னர் பிரெஞ்சுக் கடற்படைக் கப்பலான மார்கோ இலங்கை வந்துள்ளது. இதில் இந்திய கடற்பகுதிக்கான தளபதி றியல் அட்மிரல் ரஸல் வில்மோரும் கொழும்பு வந்துள்ளார்.

இவர் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியுடன் பேச்சுக்களை நடத்தினார். இதன்போதே இலங்கைக் கடற்படையுடன் இணைந்து பிரெஞ்சுக் கடற்படை இந்திய கடற்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சந்திப்பின்போது தயா சந்தகிரி, வலுமிக்க மேற்கு நாடு ஒன்றின் கடற்படை இந்திய கடற்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது இலங்கை போன்ற நாடுகளுக்குப் பாதுகாப்பானது.

இரு கடற்படையும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவது பெறுமதியான அனுபவத்தைப் பெற்றுத்தரும். குறைந்தளவு வளங்களுடன் உள்ள இலங்கைக் கடற்படை, சட்டவிரோத கடற்பயணங்களைக் கட்டுப்படுத்த இக்கூட்டு ரோந்து நடவடிக்கை உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக் கடற்படையினருக்குப் பிரான்ஸ் நாட்டில் பயிற்சிகளை வழங்குவதற்குப் பிரெஞ்சுக் கடற்படையின் இந்தியக் கடற்பிராந்தியத்திற்கான தளபதி றியல் அட்மிரல் ரஸல் வில்மோர் இணக்கம் தெரிவித்தார்.

## சமஷ்டி குறித்து விளக்கமளிக்க கனேடியக் குழு வருகிறது!

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு குறித்து எதிர்கட்சி மற்றும் இதர அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளிக்கும் பொருட்டு கனேடிய அரச சார்பற்ற போரம் ஒப் பெடரேசன் குழு இலங்கை வரவுள்ளது.

இலங்கை அரசு மற்றும் பொது அமைப்புகளின் வேண்டுகோளின் பேரிலேயே இவர்கள் இலங்கை வரவுள்ளார்கள்.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையிலும் ஒஸ்லோ பேச்சுவாத்தைகளிலும் பங்குபற்றியிருந்தனர்.

இவர்கள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவது கணிசமாக அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 25 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக இலங்கை உல்லாசப் பயணச்சபைத் தலைவர் படி விதாரண தெரிவித்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது இந்த அதிகரிப்பு வியப்புக்குரியது. ஐரோப்பாவிலிருந்தும் சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்தும் உல்லாசப்பிரயாணிகள் அதிகளவில் இலங்கைக்கு விஜயம் செய்துகொண்டு வருவது குறித்து உல்லாசப் பயணச்சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கு நோய் அபாயம் குறித்து சுகாதார அமைச்சு எச்சரிக்கை!

## குடாநாட்டிலும் பரவும் சாத்தியக்கூறு

நாட்டின் பல பகுதிகளிலும் டெங்குக் காய்ச்சல் பரவிவருவதால் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

புத்தளம், மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவிவருகிறது. இதையடுத்து இப்பகுதிக்கு சுகாதார அமைச்சு- நோய்த் தடுப்பு அதிகாரிகளையும், மருந்து வகைகளையும் அனுப்பிவைத்துள்ளது.

இதேவேளை - நாட்டின் ஏனைய பகுதிகளிலும் டெங்கு நோய் பரவக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால் அவதானமாக இருக்கும்படி சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நெருப்புக் காய்ச்சல் மற்றும் கொலரா போன்றநோய்கள் ஒரே நேரத்தில் பரவிவருவது சிக்கலாகியிருப்பதாகவும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## கொழும்பு உணவகங்கள் மாநகரசபை மீது வழக்கு

கொழும்பு நகரிலுள்ள சில உணவகங்கள் மாநகரசபை மீது வழக்குத் தொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளன. மஜஸ்ரிக் சிற்றி மற்றும் பல இடங்களில் உடனடி உணவுகளைத் தயார் செய்து விற்பனை செய்யும் உணவகங்களே இந்த வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளன. திறந்த வெளியில் உணவுகளைத் தயாரித்து விற்பதை மாநகரசபை சட்டவிரோதச் செயலாகப் பிரகடனப்படுத்தியதற்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. பல்தேசிய நிறுவனங்களின் உணவகங்களும் மாநகரசபைக்கு எதிரான இந்த சட்ட நடவடிக்கையில் இணைந்து கொள்ளவுள்ளன.

## ஐரோப்பிய யூனியன் குழுவினர் உதவும் வழிகள் ஆராய விஜயம்

சமாதான வழிமுறைக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கென ஐரோப்பிய யூனியனின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அடங்கிய குழு தற்சமயம் இலங்கை வந்துள்ளது.

பணிகளை அடையாளம் கண்டு கூட்டாகத் திட்டமிடவே இந்தக் குழு வந்துள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவுக் கூட்டத்தை தொடர்ந்து ஜூன் மாத நடுப்பகுதியில் உதவிக்கான நிதியளிக்கும் மாநாடு நடைபெற இருப்பதையிட்டு பிரசெல்ஸில் உள்ள ஐரோப்பிய ஆணைக்குழுவின் 2003 - 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், இலங்கைக்கு நிதி வழங்கும் திட்டங்களுக்கான பிரேரணைகளை இந்தக்குழுவே தயாரிக்கவுள்ளது.

# படைப்பாளியின் அகச்செழுமையும், சித்தரிப்புக்களும்

# அனுபவ வெளிப்பாட்டுக்கு உகந்த வடிவம் தருகின்றது



ரஞ்சகுமார்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ரஞ்சகுமார் 80 களின் ஆரம்பத்திலிருந்து சிறுகதை எழுத்தாளனாக, விமர்சகனாக, பத்தி எழுத்தாளனாக இலக்கிய உலகில் பிரபல்யமானவர்.

'மோகவாசல்' என்ற சிறுகதைத் தொகுதியினையும் 'ஆட்கொல்லி' என்ற குறு நாவலையும் எழுதியுள்ளார். இவரது 'கோசலை' என்ற சிறுகதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவருடனான நேர்காணல் இது.

*கேள்வி:* இன்றும் சிறுகதை வடிவம் உயிர்ப்போட்டமுள்ள முக்கியமான இலக்கிய வடிவமாக உங்களால் கருதமுடிகின்றதா?

*பதில்:* கதையாடல் மரபின் கடைசிக் கொழுந்தாகச் சிறுகதை வடிவம் கருதப்படுகின்றது. அத்துடன், சிறுகதை தனது வடிவத்தைக் காலவோட்டத்துடன் மாற்றி, புதுக்கி செப்பனிட்டு வந்துள்ளது.

போருக்கு முன்னரானதும், போர் ஆரம்பித்து சிறுகாலத்தின் பின்னருமான வாழ்க்கையை, அந்த வாழ்ககையின் தரிசனங்களை இன்றைய சிறுகதை வடிவம்- உண்மையில் இது பலவிதமான வடிவ உருக்களின் திரடசி - ஊடாக வெளிப்படுத்தியாகி விட்டது.

இன்றைய வாழ்க்கையும், இனிவரும் வாழ்க்கையும் போருக்குப் பின்னரான வாழ்க்கை. இச்சித்திரிப்புகளை வெற்றிகரமாகத் தருவதற்கு சிறுகதையின் இன்றைய வடிவத் திரட்சி இடந்தருமா என்பது கேள்விக்குறிதான்.

இனிவருங்காலம் நெடுங்கதைகளின் காலமாக இருக்கக்கூடும் என்பதே எனது அனுமானம். அதையும் "சிறுகதை"என்றே அழைத்து விட்டால் போயிற்று.

*கேள்வி:* எமது சமகாலப் பிரச்சினைகளை மொத்தத்தில் சிறுகதைகள் உள்வாங்கியது போதுமானதாக அமைகின்றதா?

*பதில்:* இதற்குரிய விடையின் பாதிப் பகுதி முதல் வினாவின் விடைக்குள் அடங்கிவிட்டது. அத்துடன், இந்த வினா எனக்கு மயக்கம் தருவதாக அமைந்துள்ளது.

பிரச்சினைகளை உள்வாங்குவது படைப்பாளியே ஒழிய, படைப்பு வடிவமல்ல.

படைப்பாளியின் அகச்செழுமையும் சித்தரிப்பு ஆற்றலும் அனுபவ வெளிப்பாட்டுக்கு உகந்த வடிவத்தைத் தேர்ந்தெடுக்கின்றது. அது சிறுகதையாக ஈழத்தில் பெரும்பாலும் அமைகின்றது. அதற்கான காரணிகள் பல. அவை சந்தைப்படுத்தலுடன் பெரும்பாலும் சம்பந்தப்பட்டவை.

*கேள்வி:* உங்களது முக்கிய படைப்பான "ஆட்கொல்லி" என்ற குறுந்தொடர் 'திசையில்' வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அது இதுவரை நூலுருப் பெறாமைக்கு என்ன காரணம் சொல்கின்றீர்கள்?

*பதில்:* ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல நீள்கதைகளின் ஆட்சிக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், இன்று திரும்பி நின்று ஆட்கொல்லியைப் பார்க்கும்போது அதன் வடிவமும் மொழியும் திருப்தி தருவதாக எனக்குப் படவில்லை. குறிப்பாக இறுதி இரண்டு அத்தியாயங்கள் சிறு அளவு திருப்தியைத்தானும் எனக்குத் தரவில்லை. ஆட்கொல்லியைத் திருத்தி எழுதிப் பிரசுரிப்பதே பொருத்தமானது.




*கேள்வி:* பின் நவீனத்துவ (**Post modernism**) கருத்தியல் உள்ளீடுகள் சிறுகதைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றதா?

*பதில்:* எனது கதைகள் யதார்த்தவாதத் தன்மையைக் கொண்டவை என்பதே என் கணிப்பு. இக்காலகட்டத்தின் தேவை அவ்வாறு அமைந்துள்ளதாகக் கருதிக் கொள்ளவேண்டும்.

இலேசாக மாயா யதார்த்தவாதக் கூறுகள் அவற்றில் தலை காட்டுவதாகவும் ஒரு பிரமை ஏற்படுகின்றது.

எனினும், பின் நவீனத்துவத்துக்குள் பிரவேசிப்பதற்கு ஈழத்து இலக்கியத்துக்கு- அதிலும் ஈழத்திலிருந்து கொண்டே எழுதுபவர்களுக்கு - சில சமூகஞ் சார்ந்த தடைகள் உண்டு.

என்னைப் பொறுத்தவரை யதார்த்தவாதப் பண்புகளைப் பயன்படுத்தியே செய்துமுடிக்க வேண்டிய எத்தனை காரியங்கள் உள்ளன. அவற்றை முதலில் கவனிப்பதே விவேகமானது.

*கேள்வி:* உங்கள் படைப்புலகம் உங்களுக்குத் திருப்தி தந்திருக்கும் என்று நம்புகின்றீர்களா?

*பதில்:* எனது இரண்டொரு கதைகள் ஏனைய ஈழத்துப் படைப்புக்களைவிட ஒருபடி மேலே நிற்கலாம். எனினும் அதையே 'உச்சம்' என்று நாம் மயங்கவேண்டியதில்லை.

ஆசைக்கு அளவு இல்லை. இன்னும் மேலேபோகலாம். யாராவது போவார்கள். அதைப் பார்ப்பது சந்தோசமாக இருக்கும்.

இப்போது நான் சொல்ல நினைக்கும் விடயங்களுக்கு நாவல் என்னும் வடிவம் உகந்ததாக இருக்கலாம். அதற்குரிய கால அவகாசமும், கடின உழைப்பும் எனக்கு வாய்க்குமா என்பதே அங்கலாய்ப்பு.

*கேள்வி:* இப்போது எழுதாமல் இருக்க எப்படி முடிகின்றது. அல்லது உங்களை மீண்டும் தயார் படுத்திக்கொண்டிருக்கும் காலமாகக் கருதுகின்றீர்களா?

*பதில்:* எழுதாமல் இருப்பது ஒன்றும் கடினமான விடயமோ, தண்டனைக்குரிய குற்றமோ அல்ல. கடந்த சில ஆண்டுகளாக எனது அகத் தூய்மை மாசுபட்டு விட்டதாக அஞ்சுகின்றேன். இந்த மாசுக்கள் அகலச் சிலகாலம் எடுக்கும். அல்லது மேலும், மேலும் சகதிக்குள் இறங்கி எழுதாமலே விட்டுவிடக்கூடும்.

எனினும், எழுதியேயாகவேண்டிய காலத்தின் தேவையையும் உணர்கின்றேன். மீண்டும் உள்ளொளி பெருக்கும் நிலைக்குத் திரும்புதற்குப பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டியுள்ளது. என்னைச் சுற்றி உள்ளவர்கள் காந்திகளும், புத்தர்களும் அல்லவே.

*கேள்வி:* உங்கள் சிறுகதைகளில் காணப்படும் அழகியல் மிகவும் சுவாரசியமானது. வாசகனைப் பலவிதங்களில் ஈர்க்கக்கூடியது. அது எப்படி உங்களுக்குச் சாத்தியமானது?

*பதில்:* கடினமான பயிற்சியின் மூலம் என்று ஒரு வரியில் சொல்லி விடலாம்.

நான் பரந்தளவில் நல்லவற்றை வாசித்திருக்கிறேன். இசை, சினிமா, ஓவியம் போன்ற இதர ஊடகங்களாலும் எனது கூருணர்வுகள் தீட்டப்பட்டன. எதிர்ப்பாலார் மீதான கவர்ச்சியைக் கண்ணியமான முறைகளில் திருப்பி நெறிப்படுத்தியதும் ஒரு காரணமெனலாம்.

*கேள்வி:* நீங்கள் கொழும்பு வாசி, அத்துடன் திரைப்பட ஆர்வலர். சிங்கள சினிமா எவ்விதம் தமிழர் பிரச்சினைகளைக் கையாள்கினறன?

*பதில்:* சிங்களத் திரைப்படங்கள்- காட்சி ஊடகம் என்ற பொதுப்பண்பு காரணமாக தொலைக்காட்சித் தொடர்களையும் இதனுடன் வசதி கருதி அடக்குவோமாயின்,

தமிழர் பிரச்சினையைக் கையாண்ட விதம் தொடர்பாக விரிவாக ஆராய வேண்டியது அவசியம்.

எனது அவதானிப்பின்படி சிங்களத்தில் ஆக்க இலக்கியங்கள் அணுகுபவர்களுக்குச் சமமான எண்ணிக்கையானோர் அல்லது அதற்கும் அதிகமானோர் திரைப்படங்களால் கவரப்பட்டுள்ளனர்.

திரைப்பட விழாக்களில் குழுமும் சிங்கள ரசிகர்களும் பெரும்பாலான இளம் சிருஷ்டியாளர்கள். திரைப்படம் சார்ந்த துறைகளுக்குள் உள்வாங்கப்படுதலும் இதற்கான சான்றுகள் 'சருங்கலே' இலிருந்து 'புரஹந்த களுவர' வரையுமான நீண்டகாலகட்டப் பரப்பினுள் பல திரைப்படங்களும், பற்பல தொலைக்காட்சித் தொடர்களும் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.

'சருங்கலே' நல்ல படைப்பு. அது வெளிவந்த காலகட்டம் தமிழ்த் தேசியவாதம் வீறுகொண்டெழுந்த காலத்துக்கு முற்பட்டதாகும். அத்துடன், தமிழ்த் தேசியவாதம் வீறுகொண்டெழும் என்பதை சிங்கள தேசியவாதம் முன்னுணர்ந்து கொண்ட காலகட்டமாகும். தமிழ்த் தேசியவாதத்தில் அன்றைய காலகட்டத்தில் காணப்பட்ட அசமதத்துவப் பண்புகளைச் சுடடிக் காட்டுவதுடன் 'பெருந்தன்மையான' சிங்கள மேலாதிக்க உணர்வுடன் தமிழர்களைச் சகவாழ்வுக்கு அழைப்பதுதான் அப்படத்தின் தொனி.

அதற்கு பின்னர் 83 ஆடிக் கலவரமும் தமிழர்களது வன்முறை சார்ந்த போராட்ட வடிவமும் பெருந்தன்மையான சிங்கள மேலாதிக்க வாதத்தைப் புறந்தள்ளி விட்டதுடன் சிங்கள பேரினவாதிகளின் கூக்குரல்களைச் சிங்களத் திரைப்படங்கள் எழுப்பின.

'கொட்டி வலிகய', 'நொமியன மினிசு' போன்ற படங்கள் தமிழர்களது வன்முறைப் போராட்டத்தினால் சிங்கள மேல்தட்டு வர்க்கத்தினரிடையே தோன்றிய சிக்கல்களையும், கசப்புக்களையும் பற்றிப் பேசின.

எந்தவிதமான கலைப் பெறுமதியுமற்ற மூன்றாந்தர சிங்களப் படங்களுள் தமிழர்களை இழிவு செய்வதை வழமையான ஒரு அம்சமாகக் கொணடிருந்தன.

மிகச் சமீபத்தில் வெளியான 'மே மகே சந்த" எனும் திரைப்படம் தமிழர்களை இழிவு செய்வதன் மூலமே, போரினால் சிதிலமடைந்த சிங்கள சமூகத்தின் வாழ்க்கை யதார்த்தங்களைச் சமன்செய்ய முயற்சித்தது.

இலகுவில் அரச ஊதுகுழல்களாக தொழிற்படும் அபாயத்திலிருந்து தொலைக்காட்சி நிறுவனங்கள் அபத்தமான - இனப்பிரச்சினை பற்றிப் புரிதல்கள் எதுவும் இன்றி சிங்கள மேலாதிக்கவாதத்தை நிறுத்தி நியாயப்படுத்தும் போக்கில் ஏராளமான தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரித்தன.

அத்துடன், போர்காரணமாகச் சிதிலமடைந்த சிங்கள சிவில் சமூகத்தின் வாழ்க்கைநிலை காரணமாக வெளிவந்த ஏனைய சீரிய சிங்களப் படங்களும்கூட வன்முறைக்கும், ஆபாசத்துக்கும் இரையாகின.

தொடர்ந்த போரின் விளைவுகளால் ஏற்பட்ட பட்டறிவின் பாற்பட்ட ஒரு மாற்றம் மிக அண்மையில் ஏற்பட்டது.

'புரஹந்த கலுவர" வரவுதான், போர் பற்றிய சிங்கள இனவாத அரசின் புனைவுகளும், இராணுவத்தின் புனைவுகளும் எவ்வளவு தூரம் பொய்மை நிறைந்தவை என்பதை - இந்த அருமையான திரைப்படம் அம்பலப்படுத்தியது. இச்செல்நெறி தொடரும் என்றே தோன்றுகின்றது.

*கேள்வி:* இறுதியாக வளர்ந்து வரும், புதிதாக எழுதவரும் புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன?

*பதில்:* படைப்பு உந்தல் ஏற்படும் தருணம்வரை காத்திருங்கள்

ஆயிரம் ஆமை முட்டைகளைவிட, ஒரு கோழிமுட்டை மேலானது என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். முகதுஸ்தி செய்பவர்களையும், மிகை மதிப்பீடு செய்பவர்களையிட்டும் எச்சரிக்கையாக இருங்கள்.

உங்களது பேனாவின் எழுதும் முனையைவிட அதன் முடிவு பெறுமதிமிக்கது என்பதனை அனுபவத்தில் உணருங்கள். இனி நீங்கள் எழுத ஆரம்பிக்கலாம் உண்மையான எழுத்து ஊற்றெடுப்பதை ஆனந்தமாக அனுபவிக்கலாம்.

**நேர்காணல்:கோகுலராகவன்**

---

# அனைத்துத் தரப்பினரும் அங்கம் வகிக்கும் சமாதான மத்திய நிலையம் அமைக்கப்படும்

## ஏற்பாடுகள் தயார் என்கிறார் அமைச்சர் ராஜித

சமாதானத்தை முன்னிட்டு தேசிய மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இதுவரை ஒரே மேடையில் தோன்றாத இடதுசாரிக் கட்சிகள் உட்பட - ஏனைய அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், தொழில்சார் நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோரை இணைத்து இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதன்படி அரசாங்கத்துக்கு விசுவாசமானவர்களும் மற்றும் விரோதமானவர்களும் சமாதானத்துக்கு ஆதரவானவர்கள் எனவும், சமாதானத்துக்கு விரோதமானவர்கள் எனவும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சிஹல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய இனவாதப் பிரிவினர் அனைவரையும் சமாதானச் செயற்பாடுகளில் நாட்டம் கொள்ள வைத்து, தேசிய சக்தி ஒன்றை உருவாக்கப் போவதாகவும், இதற்காகவே இந்த மத்திய நிலையம் உருவாக்கப்படுவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

## நெடுந்தீவு, ஊர்காவற்றுறையில் அடுத்து சமுர்த்தி வங்கிகள்

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் சமுர்த்தி வங்கி திறந்து வைக்கப்படும் என்று சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பாக இந்த வங்கிகள் திறக்கப்படும். 32 புதிய வங்கிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை மாவட்டங்களில், இப்போது செயற்படும் 72 வங்கிகளுக்கு மேலதிகமாகச் செயற்படும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவருக்கு காயம்

மிகவேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவேளை, பள்ளத்தில் தூக்கி எறியப்பட்டு இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை உடுவிலில் நடைபெற்ற இச்சம்பவத்தில் வ.வசந்தன் (வயது 24), த.பிரகாஷ் (வயது 17) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர். (ரா, 60)

## மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டிகளில் மத்தியஸ்தர் ஒழுங்கமைப்பு இடம்பெறவிருப்பதனால், அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ம.அருள்குமாரன் கேட்டுள்ளார்.

## வெங்காயப் பூவுக்குச் சந்தையில் மவுசு

(நெல்லியடி)

தற்பொழுது குடாநாட்டுச் சந்தைக்கு வரத்தொடங்கியுள்ள சின்ன வெங்காயப் பூவிற்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

தென்பகுதிக்குச் சின்ன வெங்காயப் பூ எடுத்துச் செல்லப்படுதலே இன்றைய மவுசுக்குக் காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். முன்னைய காலங்களில் சந்தை வாய்ப்பு இன்மையால் தோட்டங்களின் பாதையோரங்களிலும், வீதி யோரங்களிலும் விவசாயிகளால் இவை வீசியெறியப்பட்டு வந்தது குறிப்பிடததக்கது. (13)

## பனையால் வீழ்ந்த தொழிலாளி படுகாயம்

பனை மரத்திலிருந்து வீழ்ந்த சீவல் தொழிலாளி படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை காரைநகர் நெடுங்காடுப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த குணரெட்ணம் சத்தியானந்தன் (வயது 27) என்னும் சீவல் தொழிலாளியே படுகாயமடைந்து, காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (60)

# மிலிந்தவின் கட்டாய ராணுவசேவை; சிறுபான்மை மக்களைப் பாதிக்கும்!

## தென்கிழக்கு பல்கலை அரசியல் விஞ்ஞான சங்கம் கருத்து

(கல்முனை)

இனவாதம், மொழிவாதம், பிரதேச வாதம் போன்றவற்றைக் கடந்து தேசியவாதம் எனும் எல்லையினுள் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் உள்வாங்கப்படும்போதுதான், கட்டாய இராணுவ சேவை பற்றிச் சிந்திக்க முடியும்.

- இவ்வாறு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இப்போதுதான் துப்பாக்கிகளின் இரைச்சல்களும், பீரங்கிகளின் முழக்கங்களும் சற்று ஓய்வெடுத்திருக்கின்றன. இந்த ஓய்வு நிரந்தரமானதாய் அமையவேண்டும் என, எல்லா இன மக்களும் பிரார்த்திக்கின்றனர். இன முரண்பாட்டுத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் முன்கொண்டு செல்லப்பட, மற்றொரு புறமாக இன முரண்பாட்டினைத் தூண்டிவிடும் முயற்சிகளும் அரங்கேற்றப்படுவதனை இந்நாட்டிலுள்ள எல்லா இன மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக இது விடயத்தில் சிறுபான்மையின மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, கட்டாய இராணுவ சேவை குறித்து இன்று பேசிக் கொண்டிருக்கிறார். 18 வயது பூர்த்தியான அனைவரும் இராணுவ சேவையில் உள்வாங்கப்படுதல் இதன் பொருளாகும். பயிற்சியின் பின்னர் இவர்கள் தமது வழமையான வாழ்க்கைக்குத் திரும்பமுடியும். அவசியம் ஏற்படும்போது இவர்கள் சேவைக்கு அழைக்கப்படுவர்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் இத்திட்டம், இரண்டு கோணங்களில் இருந்து நோக்கப்படல் வேண்டும். ஒன்று, சர்வதேச அரசியலை முன்வைத்த பார்வை. மற்றையது, தேசிய அரசியலை முன்வைத்த பார்வை.

இன்று சர்வதேச ரீதியில் நவ காலனித்துவத்தின் மூலம் பல ஜனநாயக நாடுகள் உலக, பிராந்திய வல்லரசுகளினால் மறைமுகமாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற முக்கிய தேவைகளுக்காக இவ்வல்லரசுகள் மீது, எம்மைப் போன்ற வளர்முக நாடுகள் தங்கிநிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை சாதகமாகக் கொண்டு, இவ்வல்லரசுகள் எம்மீது பல அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன.

இராணுவ ரீதியில் எமது பலத்தினை அதிகரித்துக்கொள்ளும்போது, எம்மீது இவர்களால் பிரயோகிக்கப்படுகின்ற அழுத்தங்களைக் குறைத்துக்கொள்ள முடியும். உலகின் அதிகார ஒழுங்கினைத் தீர்மானிக்கின்ற விடயத்தில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இத்தகைய ஏற்பாடு ஆதாரமாக அமையலாம். சுருக்கமாகக் கூறின் தேசிய இறைமையின் பலத்தினை அதிகரித்துக் கொள்ளலாம்.

இன்றைய எமது நாட்டின் உள்ளக அரசியல் சூழலை அவதானிக்கும்போது, இத்தகைய கட்டாய இராணுவ சேவை குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அரசியலமைப்பு ரீதியாக ஒவ்வொரு இனத்தவரினதும் உணர்வுகளுக்கு சமத்துவமான உத்தரவாதம் வழங்கப்படவில்லை. இதனால், கடந்த காலத்தில் ஏற்பட்ட இன முரண்பாட்டுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு எட்டப்படவில்லை. ஓர் இனத்தவர் மீது மற்றொரு இனத்தவருக்கு இருந்துவரும் சந்தேகங்கள் களையப்படவில்லை. மொத்தத்தில் தேசிய ஒருமைப்பாடு என்பது ஏற்படுத்தப்படவில்லை.

இத்தகையதொரு நிலையில் அமைச்சர் மிலிந்த மொறகொட முன்மொழிந்துவரும் கட்டாய இராணுவ சேவை என்பது, இந்நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களை வெகுவாகப் பாதிக்கக்கூடியதொன்றாக அமையப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை. நாட்டில் 70% மாக வாழும் சிங்கள பௌத்தர்களுடைய பலம் இராணுவ ரீதியில் அதிகரிக்கின்றபோது, சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கி இரண்டாம்தரப் பிரஜைகளாக பின்தள்ளிவிடுவதற்கு அது சாதகமாக அமைந்துவிடும்


எனவே, எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வுடனான ஒரு சமாதானத் தீர்வை நடைமுறைப்படுத்தும்வரை, அமைச்சர் மொறகொட அவர்களின் கட்டாய இராணுவ சேவைத்திட்டம் நடைமுறைக்கு வருவதை எந்தவிதத்திலும் அங்கீகரிக்க முடியாது.

இனவாதம், மொழிவாதம், பிரதேச வாதம் போன்ற பிரிவினை வாதங்களைக் கடந்து, தேசியவாதம் என்கின்ற எல்லையினுள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் உள்வாங்கப்படுகின்றபோதுதான், கட்டாய இராணுவ சேவை பற்றிச் சிந்திக்க முடியும் என்பதனை அமைச்சர் மொறகொடவும் இந்நாட்டு மக்களும் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.குடாநாட்டில்

# பெண்களின் நிலை குறித்து ஆய்வுசெய்யும் தென்னாபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்



யாழ்.வந்த தென்னாபிரிக்கக் குழுவினர்.

சமாதான முன்னெடுப்புக்களில் பெண்களின் பங்கேற்பு வீதம், மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, தென்னாபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஹூமைநா முஸம்பில் தலைமையிலான வெளிநாட்டு, தென்பகுதிப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர்.

அனுராதபுரம், கொழும்பு மற்றும் வவுனியா போன்ற இடங்களிலுள்ள பெண்கள் அமைப்புகளைச் சந்திதது கலந்துரையாடிய இவர்கள், நேற்று யாழ்ப்பாணம் பெண்கள் அபிவிருத்தி நிலைய இயக்குநர், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அபிவிருத்திமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்தனர்.

இங்குள்ள பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ள இவர்கள் - இன்று யாழ்.குடாநாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கும் செல்லவுள்ளனர்.

# 1,540 செயற்கை உறுப்புக்கள் வெண்புறாவால் வழங்கப்பட்டன

கடந்தகால யுத்தத்தினால் உடல உறுப்புக்கள் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட மக்களுக்கு வெண்புறா நிறுவனம் இதுவரை ஆயிரத்து 540 செயற்கைக் கால் மற்றும் கைகளைப் பொருத்தியுள்ளது.

வெண்புறா நிறுவனம் வன்னி மாவட்டத்தில் வாழ்விழந்தோருக்கு மீணடும் வாழ்க்கையை அளித்துள்ளதுடன மிதிவெடியில் இரு கால்களையும் இழநதவர்களுக்கு முச்சக்கரவண்டிகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.(34)

# உலகக் கிண்ணப்போட்டியில் வென்றால் இலங்கை அணிக்கு 1 கோடி ரூபா வெகுமதி

(கொழும்பு)

தென்ஆபிரிக்காவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை வெற்றியடைந்தால் ஒரு கோடி ரூபா வெகுமதியாக வழங்கப்படும் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இலங்கை அணி, இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறின் 20ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஒவ்வொரு வீரருக்கும் வழங்கப்படும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பொருட்டு, இலங்கை வீரர்களின் ஊதியத்தை அதிகரிக்கவும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் இவர்களது ஊதியம் 700 டொலர்களில் இருந்து 1,400 டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விளம்பர உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் இலங்கை வீரர்களின் நிவாரண உதவிக்கென 1 லட்சத்து 50 ஆயிரம் டொலர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மாணவரிடையே அதிகரிக்கும் நீரிழிவு, இருதய நோய்கள்

## மருத்துவ ஆய்வுகள் தெரிவிப்பதாக அமைச்சர் ராஜபக்ஷ தகவல்

(கொழும்பு)

பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் நீரிழிவு, இருதய நோய்கள் அதிகமாக ஏற்பட்டுவருவதாகவும் இதற்கு சிறுவர்கள் மீதான அழுத்தங்களே காரணம் எனவும் பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில நீரிழிவு, இருதய நோய்கள் ஏற்படுவது அதிகரித்து வருகின்றன. இதற்குப் பெற்றோர்களின் அழுத்தமே காரணமாகும் என மருத்துவ ஆய்வுகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

தற்போதுள்ள போட்டிக் கல்வி முறையால் பிரபல பாடசாலைகளுக்கு, நீண்ட தூரத்திற்குப் பிள்ளைகளை அனுப்புவது, பாடசாலை நேரத்திற்குப் புறம்பாக நீண்ட நேரம் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்க அனுப்புவது, ஓய்வு நேரமின்றி பொழுதுபோக்கு வாய்ப்புக்கள் இல்லாதமை போன்ற காரணங்களாலேயே மாணவர்கள் உடல், உளப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இதனால் நீரிழிவு, இருதய நோய்கள் மாணவர்கள் மத்தியில் அதிகமாக ஏற்படுவது மருத்துவ ஆய்வு மூலம் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

பாடசாலை நேரத்தில், உடற்பயிற்சி நேரத்திற்குப் பின்னர் மாணவர்கள் உணவு உட்கொள்ளப் போதியநேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுரனமல ராஜபக்ஷ பாடசாலை அதிபர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### வட - கிழக்கு அரச ஊழியர்கள்

# அறிவுசார் நிர்வாகத்துக்குத் தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்

## பிரதம செயலாளர் ரங்கராஜா தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்க ஊழியர்கள், அறிவுசார் நிர்வாகத்துக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என வட,கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா தெரிவித்துள்ளார்.

திருமலை - உப்புவெளியில் அலுவலகக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வட,கிழக்கு மாகாண நிர்வாகக் கட்டமைப்பில் எதிர்காலத்தில் பல மாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன. இதற்கு ஏற்றவகையில் மாகாண சபை ஊழியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

இல்லையேல் இந்த மாற்றத்துக்குள் நாம் அள்ளுண்டு போய்விடும் நிலை ஏற்படும் என்றும் மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா மேலும் தெரிவித்தார்.

### குருநகரில் இரவுப்படிப்பகம்

குருநகர் சென். றோக்ஸ் சனசமூக நிலைய இளைய தலைமுறை இளைஞர் கழகத்தினால் இரவுப் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வறிய மாணவர்களின் நலன் கருதியும் வீடுகளில் படிக்க வசதியில்லாத மாணவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டும் இந்த இரவுப் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் மாலை 6.00 மணியிலிருந்து 9.00மணிவரை இந்த இரவுப் படிப்பகம் நடைபெற்று வருகின்றது.

# பொதுநூலகத்துடன் இணைந்து யாழ்.மாணவருக்கு மகாபொல!

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் 'மகாபொல' உதவித்திட்டத்தின் கீழ் உதவிவழங்க உள்ளதாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது புனருத்தாரணம் செய்யப்படும் யாழ். பொது நூலகத்தின் வேலைகள் முடிவடைந்து திறப்பு விழா நடைபெறும் நாளில் இருந்தே அத்திட்டம் அமுல் செய்யப்படும். யாழ். பொதுநூலகத்துடன் இணைந்தே இந்த மகாபொல உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என மகாபொல முகாமைச் சபையின் பணிப்பாளர் சாமினா தெரிவித்திருக்கின்றார்.

# ரோக்கியோ மாநாட்டுக்கு இந்தியாவும் ஆதரவு!

(கொழும்பு)

ஜூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்திருப்பதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்திருக்கிறார்.

இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளுமா என்பது குறித்து இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை.

அத்துடன் - இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஜப்பானிய அரசாங்கம் கவனமாக இருக்குமாறும், இந்தியா தனது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையிலேயே கவனமாக இருக்குமாறு ஜப்பானை எச்சரித்ததாகவும் அகாஷி மேலும் தெரிவித்தார்.



வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிதம்பரநாதன், மங்கள விளக்கு ஏற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் மற்றும் நிகழ்வுக்கு தலைமை வகித்த செல்வன் செ.மயூரனையும் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழகத்திலிருந்து அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் ஏப்ரலுக்கு முன்னர் ஆரம்பம்!

## முகாம் முகாமாக பட்டியல் தயாரித்தது தமிழக அரசு

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளைக் கட்டம் கட்டமாகத் திருப்பியனுப்பும் பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக ஆரம்பமாகுமென தமிழக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக தமிழக அரசின் புனர்வாழ்வு இலாகா - இலங்கை திரும்ப விரும்பும் அகதிகளின் பெயர்ப்பட்டியலை ஏற்கனவே தயாரித்திருப்பதாகவும் -

இந்தப் பட்டியல் ஏற்கனவே புதுடெல்கியிலும் சென்னையிலுமுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிக விரைவில் இலங்கைத் தூதரக அதிகாரிகள் அகதிமுகாம்களுக்குச் சென்று நேரடியாகப் பார்வையிட்டு, அகதிகள் தாயகம் திரும்புவது பற்றிய இறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமிழகத்தில் தங்கியிருந்தபோது இந்தியப் பிரஜைகளை திருமணம் முடித்தோரும் விரும்பினால் தம் நாட்டுக்குத் திரும்பலாம் எனவும் இல்லையேல் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு இந்தியப் பிரஜாவுரிமை அளிக்க ஏற்பாடு செய்யப்படுமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்படுமானால் அகதிகள் தலா 150 பேராக தூத்துக்குடியிலிருந்தும் இராமேஸ்வரத்திலிருந்தும் கப்பல்கள் மூலமாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பிரதமர் ரணிலின் நடவடிக்கைகள் நம்பிக்கையீனத்தை தருகின்றன

## என்கிறார் அமைச்சர் மகேஸ்வரன்

ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு வருடகால நடவடிக்கைகள் எனக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

- என்று இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.



எதிர்வரும் 27 ஆம் திகதி நாடாளுமன்ற கூட்டம் ஆரம்பமாகவுள்ளது. அதில் ஐ.தே.கட்சிக்கு எதிராக விமர்சிக்கவுள்ளேன். தமிழ் மக்களின் தரப்பில் பேச எதிர்க்கட்சிகள் இல்லை. தமிழர் கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் கூட ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்குகின்றன.

தமிழர்கள் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் எண்ணத்தில் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர் நீண்டநேரம் என்னிடம் பேசவேண்டுமென்று தனது எண்ணத்தை வெளியிட்டார். அடுத்த வாரம் ஜனாதிபதி என்னைச் சந்திப்பதற்கு இணங்கியிருக்கிறார்.

பிரச்சினைகளில் விட்டுக்கொடுத்துச் செயற்படுவதற்கு தயாராக இருக்கிறேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று அமைச்சர் மகேஸ்வரன் தமது பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்

தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளளிப்பதற்காக 1990ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில், இதுவரை தமது கடனை மீளப்பெறாதோர் பின்வரும் நாட்களில் மீளப் பெறலாம் என நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

**நேர அட்டவணை**

**14.02.2003**
*வருவாய்ப்பகுதிச் செயலகம் – புளியங்குளம் – காலை – 10.00 – மு.ப – 10.30 மணி*
*மத்திய கல்லூரி – கிளிநொச்சி – பி.ப – 03.00 – பி.ப – 04.00 மணி*
**15.02.2003**
*வேம்பொடுகேணி*
*அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை – பளை – காலை – 09.00 – ந.ப 12.00 மணி*

### சகலபிரதேச....

உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களுக்கு பரமநாதனும்,
சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களுக்கு சூ.சிறிலும்,
கோப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களுக்கு அ.நீலகண்டனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (லி,ரா)

### யாழ்.செயலக...

உதவியாகவே யாழ். அரச செயலகத்தில் இணைப்பு அலுவலகம் திறக்கப்படவுள்ளது

சிறான் பணிப்பாளா செல்வின் இரேனியஸ், இணைப்பு அலுவலகம் ஒன்றினைத் திறப்பதற்கு இடம் ஒதுக்கித்தருமாறு யாழ். அரச அதிபரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இணைப்பு அலுவலகத்துக்கான இடம், செயலகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவிருக்கும் சிறான் இணைப்பு அலுவலகத்துக்குத் தேவையான கணினிகள், தளபாடங்கள் மற்றும் வாகன வசதிகளை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கும் எனவும் ஆளணியினரை சிறான் நியமிக்கும் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை -

சிறான் யாழ்.மாவட்ட இணைப்பாளராக முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபர் ரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### டெனிஸ்

பிரதிநிதிகள் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடியுள்ளார்கள்.

### தலைவர்......

செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. முதற்கட்டமாக 52 மாணவர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டது.

இவ்வெண்ணிக்கை காலப்போக்கில் அதிகரிக்கப்படும் என தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 32 பேர் யாழ் பல்கலைக்கழகத்தை சேர்ந்தவர்களாவர். இம்மலரவன் நம்பிக்கை நிதியம் தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனையின் விளைவே என தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ராணிமைந்தன் மேலும குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், அருட் தந்தை எஸ்.ஜே. இமானுவேல் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி க.சிதம்பரநாதன், சத்தியசீலன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் கஜேந்திரன், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இலக்கியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களுக்கான உதவித் தொகையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் துணைப் பணிப்பாளர் இனியவன் மாணவர்களுக்கு வழங்கினார்.

# பிந்துனுவெவப் படுகொலை வழக்கு 23 பிரதிவாதிகளுக்கு விடுதலை

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்தது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட 41 பேரில் 23 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாததாலேயே விடுதலை செய்யப்படுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை, எஞ்சிய 18 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்குகள், தொடாந்தும் நடைபெறும் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

பிந்துனுவெவ தடுப்புமுகாமில் இருந்த தமிழ் இளைஞர்கள் 25 இற்கும் அதிகமானோர் - அப்பகுதியில் இருந்து திரண்ட கும்பலினால், அங்கு காவலில் இருந்த படையினரின் ஒத்துழைப்புடன் கோரமாக வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

### எங்கெங்கு..

இதற்குதவியாக உதவி அரசாங்க அதிபர்களிடமுள்ள மீள்குடியமர்வு தொடர்பான அறிக்கைகளும் புள்ளிவிபரங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளிவிபரங்களும் திரட்டப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (லி,ரா)

### உயர்...

சமாதானப் பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாகவும் அமைச்சர் மிலிந்த மொறகொட விளக்கியிருக்கின்றார்.

அதேவேளை, அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறிதது நிதியமைச்சர் கே.என் சொக்ஸி ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார் அத்துடன் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆகிய சர்வதேச ஸ்தாபனங்கள் வழங்கியுள்ள நிதிகளின் விபரங்கள் பற்றியும் நிதியமைச்சர் ஜனாதிபதிக்கு விபரித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணததிற்கு தனியான முறையில் வழங்கப்பட்ட நிதிகளின் விபரங்கள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள மனிதாபிமான உதவிகள், புனரமைப்பு பணிகள் போன்றவை பற்றியும் நிதியமைச்சர் எடுத்துக கூறியுள்ளார்.

மாலை ஆறுமணிக்கு ஆரம்பித்த இரண்டாம் கட்டச் சந்திப்பு இரவு 8 .45 மணிக்கு முடிவடைந்தது.

முன்னதாக ஜனாதிபதியுடனான சந்திப்பு இன்று நடக்குமென பிரதமர் அலுவலக வட்டாரங்கள் நேற்று நள்ளிரவு தகவல் வெளியிட்டு இருந்தன. திடீரென ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கிடைத்த அழைப்பின் பேரில் இச்சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 2 ஆவது நாளாக பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் பத்திரிகையொன்றில் ராகிங் தொடர்பான செய்திகளின் உண்மைநிலையை வெளிப்படுத்தக் கோரி, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் குறித்து கடந்த 16 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகையில் வெளியான செய்தியில் உண்மைத்தன்மை இருநதால் அது வெளிப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

செய்தி உண்மைக்கு புறம்பானதாக இருந்தால் பல்கலைக்கழக நிர்வாகம் குறித்த பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அத்துடன் - தமது தவறினை பத்திரிகை நிறுவனம் பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

- என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இரண்டாவது நாளாக நேற்றும் விரிவுரைகளுக்கு செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்கள், வளாகத்திற்கு வெளியே மரநிழல்களில் கூட்டம் கூட்டமாக நின்று உரையாடியதைக் காணமுடிந்தது. (ச)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.71 | 156.02 |
| 1 யூரோ | 102.49 | 103.64 |
| 1 சுவிஸ் பிராங் | 70.01 | 71.09 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.47 | 57.44 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

# யாழ்.துரித மீள்குடியமர்வு.....

நிதி வளங்கள் சேகரித்தல் ஆணையாளர் சிவானந்தன், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்பு ஒன்றியத்தலைவர் சூ.சொலமன் சிறில், யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் சார்பில் எஸ்.ஏ.சி. முபீன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, யாழ். மாவட்டத்திற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளை அடையாளங்கண்டு மதிப்பிடும் குழுவிற்கான தேவைகளை இனங்காணும் சபைக்கு - தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் ஏழு பிரதிநிதிகளும் அரசாங்கத்தரப்பில் ஏழு பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டனர்.

இதில் விடுதலைப் புலிகள் சார்பில் யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சூ.சிறில், யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலம், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் க.பரமநாதன், தென்மராட்சி மக்கள் நலன் காப்பகத்தைச் சேர்ந்த அருந்தவபாலன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அநீலகண்டன், குருநகர் பங்குத்தந்தை ஜெயசேகரம் அடிகளார் ஆகியோரும்,

அரசாங்கத் தரப்பில் நிதிவளங்கள் சேகரித்தல் ஆணையாளர் சிவானந்தன், பெரேரா, பிரதமரின் ஆலோசகர் கலாநிதி ஏ.எஸ். குணசிங்கம், எஸ்.ஏ.சி.மூபீன், மௌலவி சுபையான், கலாநிதி வி.அம்பலவாணர், எ.ஜயசேகர ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட இக்குழு, இடம்பெயர்ந்த மக்களை எங்கெங்கு குடியமர்த்தலாம் என்பதுடன் அம்மக்களுக்குத் தேவையான தேவைகளை இனங்கண்டு அவர்களை மிக விரைவில் குடியமர்த்து வதற்கான திட்டங்களை வகைப்படுததும்.

அரசு - புலிகள் தரப்புக்களிலிருந்து நியமிக்கப்பட்ட பதினான்கு பேர் கொண்ட இக்குழுவிற்கு - ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு யு.என்.எச்.சி.ஆர் அமைப்பும் ஏழு பேரை நியமித்துள்ளது.

இவ்வாறு மொத்தமாக இருபத்தியொரு பேரைக்கொண்ட இக்குழுவிலிருந்து - அரசு, புலிகள், யு.என்.எச்.சி.ஆர். ஆகிய தரப்புக்களிலிருந்து தலா ஒருவர் வீதமாக மூன்று உறுப்பினர்களை கொண்ட ஏழு குழுக்களும் உருவாக்கப்பட்டன.

இந்த ஏழு குழுவினரும் ஒவ்வொரு குழுவும் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை தெரிவுசெய்து, அவற்றில் உள்ள மீள்குடியமர்வு தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை சிறானுக்கு சமர்ப்பிக்கும். பின்னர் சிறான் இதற்கான நிதி மூல வளங்களை வழங்கும் என நேற்றைய கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது இக்கூட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (லி,ரா)

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்

*(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)*

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய ஐ.வைத் திலிங்கம் நேற்றுமுன்தினம் (20.01.2003) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும், நவரஞ்சிதமணி, இரவீந்திரன், காலஞ்சென்ற ரஜனி மற்றும் லலிதா, துஷியந்தன் (சுடர்மணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகுஞ்சரம், காலஞ்சென்ற வடிவாம்பிகை, சிற்றம்பலம், யோகரட்ணம், பவானந்தன், மகேந்திரராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கையிலாயபிள்ளை, அன்னம்மாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெற்று, எள்ளங்குளம் மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை வீதி,*
*நவிண்டில்,*
*கரணவாய் வடக்கு,கரவெட்டி.*

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.